காதியானிப் பிரசாரமும்
கம்பனை முஸ்லிம்களின் வெற்றியும்

973
297.3

இஃது

கம்பளை

M. S. N. உமர்பாக்ஷா சாஹிப் அவர்களால்,

எழுதப்பட்டு

OFFICE OF THE REGISTRAR
No.
11 FEB 92

தென்காசி,

"முஸல்மான்" புத்தகசாலைக்கு

பிரசுரஉரிமை கொடுக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

பிரதிகள் 1000.

ரபீயுல் அவ்வல்

1345.

முகவுரை.

முஸ்லிம்களே!

நேர்வழி சறுகிய, குபாடக்காரர்கள் பிற்காலத்தில் வெளிவந்து என் உம்மத்துகளைக் கெடுக்கத்துணிவார்களென்ற நன்நபி வசனப்பிர காரம் இக்கம்பளையிலும் தோன்றினமையால் அடியோடு அப் பூண்டை ஒழிக்கக்கருதி கனம் "முஸல்மான்" ஆசிரியரவர்களைத் தருவித்து பல உபயோக உபதேசங்களைப்புரிந்தோம். அதன்பின் யாவருக்கும் காதியானி மதக்கூற்றுகள் தெற்றென வெளியாய்விட்டன. அன்னூர் நிகழ்த்தியபிரசங் கத்தில் காதியானிமதகுருவாம், மிர்ஸாஸாஹிபின் சரித்திரம் முன்னறிக் கைகளில் ஆத்தம்பாதிரியோடொத்தல்; விண்ணுலகவிவாகம், மௌல்வி வஜுவுல்லாவுடன்தர்க்கம், ல-பிஅப்துல்ஹக்குடன் முபாஹிலா, பிளேக், லீக்ராம் பண்டிதர், மௌல்வி முஹம்மதுஹு-ஸைன் முதலிய பல உல மாக்களிடத்திலும், பிற மதஸ்தர்கள் பலரிடத்திலும், முன்னறிக்கை தர்க்கங்களில் தோல்வியுற்று, அன்னூரால் அடைந்த சிறுமைகளையும், சுமார் 3½-மாதகாலமாக விபரித்தார்கள். ஆங்கு தர்க்கம் நிகழ்த்த வந்திருந்த காதியானி மௌல்வி, இவ்விஷயங்களைச்செவியுற்றதும் வெளிவர வெட் கித்து தர்க்கத்திற்கு வரமுடியாதெனக்கூறிச் சென்றுவிட்டார். அவ் விஷயங்களையெல்லாம் சற்று விபரித்தெழுதுவதாயின் பெரும்புத்தகமாக சமை-யுமாதலாலும், ஜனுப், முஸல்மான் ஆசிரியர், காதியானிமத குரு வின் அம் முன்னறிக்கைகளை விபரமாக வரைந்து வெளியிடுவதாக வாக் களித்திருந்தமையாலும், அவற்றை விபரிக்காது விடுத்தனம். எனினும், காதியானி மதஸ்தருக்கும் முஸ்லிம்களுக்கும் நடந்த கடிதங்களையும், தர்க்கத்திற்கு அழைக்கச்சென்ற இஸ்லாமியத் தூதுவர்களுடன் நடந்த சம்பாஷணை வரலாறுகளையும் விபரிக்கப்பட்டிருக்கிறது. இதனை வன்றி வாசித்தால் இன்னவர்களின் குரு பொய்யனென்பதும், அதனை தர்க்கத் திற்குக் கொண்டுவராமல் மறைக்க இன்னவர் புரியும் தந்திரோபாயங் களும் தெற்றென வினங்குமென்பதிலையமின்று. இன்னும் காதியானி மத இரகசியம் ஓளவு தெரிந்துகொள்ள இவர்களது நபியின் பொய்க் கூற்றுகளில் பல விளக்கப்பட்டிருப்பதைப்பார்த்து யாவரும் உண்மையை உணர்ந்துகொள்ளலாம்.

ஆகவே, இப் புத்தகத்தை வன்றிப்படித்து உண்மையை விளங்கி அதன்படி ஒழுகிவர சர்வாதிகாரமுடைய இறைவன் அருள்கூர்வா-

S 9932 - M.S.I

بسم الله الرحمن الرحيم

காதியானிப்பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும்

இக் கம்பளைமா நகரில் சுன்னத்துவல் ஜமாஅத்து முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருங்காலை பிரித்து வையும் குளப்பத்தையும் கிளப்புவதற்கு சிலர் தோன்றினார்கள். போஸ்தான்கான் என்றொருவர் ஆரம்பத்தில் ஞான நூற்களை வாங்கிப் பாராயணம்செய்து ஞானப்போக்காகவேபேசிக்கொண்டிருப்பார். சில சந்தர்ப்பங்களில் தொழுகையில் என்ன இருக்கிறது; இன்னின்ன வணக்கத்தில் என்ன பயனிருக்கிறது; அதை யறிந்தல்லவோ வணக்கம்புரியலாம் பலன்கிட்டு மென்று பலரிடமும் வாதாடுவார். இவ்வாறு சில வருஷங் கழிந்தபின், தூதன் என்னும் ஓர் காதியானிப் பத்திரிகையை வாங்கிப் பார்வையிட்டார். அதன்மீது தாம் காதியானிமதத்தில் சேர்ந்து கொண்டு தமது மதத்தை வெளியிடாமல் மறைத்து பொது ஜனங்களிடத்தில் தற்காலத்து இமாமை அறியவேண்டும். இன்றேல், மனிதன் ஜாஹிலிய்யத் உடைய மரணமாய் மரணிப்பான் என்று கூறிவந்தார். ஒரு விடுத்தம் நாயகம் அவர்கள்மீது ஸலவாத்து ஓதிக்கொண்டிருக்கும் ஒருவரை நோக்கி இதில் என்ன பிரயோஜன மிருக்கிறதென்று நிந்தித்தார். மறு சமயம் ஒரு கடையில் இருந்துகொண்டு ஹஸ்ரத் நம் நபிகநிலகம் அவர்கள் இவ்வேளை வழியாகத்தான் மிஃராஜுக்கு போயிருப்பார்களோ வென்றும் பரிகசிக்கத்தொடுத்தார். இவ்வண்ணம் இவர் பல முஸ்லிம்களைத் தொந்தரை செய்தது மன்றி, பஹிரங்கமாகவும் சில சமயம் இரகசியமாகவும் மதத்திற்கு மாறான வார்த்தை

களைப்பேசவும் ஆரம்பித்தார். இவ் விஷயம் பொதுஜன முஸ்லிம்களுக்கு எட்டியபோது கம்பளை டவுண் மஸ்ஜீதில் பொதுக் கூட்டமொன்று கூடி பேஷ் இமாம் முஹம்மது தம்பி ஆலிம் சாஹிப் மர்ஹூம் அவர்கள் முன்னிலையில் அந்த போஸ்தான் காதியானி என்பவரை வருத்தி உமது விஸ்வாசமென்ன? என்ற விஷயங்களை விசாரிக்கும்போது; கேட்ட கேள்விக்குச் சரியான பதிற் கூறமுடியாது குதர்க்கமானவார்த்தைகளைப்பேசி கடைசியாக எங்கள் அஹ்மதீ மௌல்விகளை வரவழைத்து உங்கள் மௌல்விகளையும்கொண்டு எதிரெதிராக தர்க்கம் புரிந்துதான் உண்மையை அறியவேண்டும். நீங்கள் கூறுவதை என்னால் அங்கீகரிக்கமுடியாதெனக் கூறி போய்விட்டார். அவர் சென்ற தற்குப்பின் முன்னையைவிட அதிக மும்முரமாக காதியானி மதப்பிரசாரம் புரியலாயினர். அதாவது: ஹஸ்ரத் ஈஸா(அலை) அவர்கள் இறந்துபோனார்கள். மிர்ஸாகுலாம் அஹ்மது ஈஸா நபியாயிருக்கிறார். அன்றியும், மஹ்திபும் மூஜத்திதும் காலத்தின் இமாமுமாயிருக்கிறார். ஆதலின், இவரை இவ்வாறு நிர்ணயம் கொள்ளாதவர்கள் ஜாஹிலிய்யத் உடைய மரணமாய் மரணிப்பார்கள் என்பதே.

அப்பாஸ் என்ற ஒருவர் இந்துமத சன்யாசியைப்போலவும், இன்னும் பல வேஷங்களாகவும் மாறிமாறி காலத்தைக் கடத்திவந்தவரும் இம் மார்க்கத்தில் சேர்ந்துகொண்டு முஸ்லிம்களை தூஷிக்கவும் வசைமொழிகளால் தாக்கவும் தொடுத்தனர். அன்றியும், பல தடவைகளிலும் எங்களது மதத்தைத்துரோகத உங்களுக்கு மோக்ஷகதி கிடைப்பதில்லை. இது விஷயத்தில் எங்களோடு தர்க்கிக்க இஷ்டமிருந்தால் உங்களது ஒரு மௌல்வியை வரவழைத்து தர்க்கித்து உண்மையை விளங்கிக்கொள்ளுங்கள். இதற்கு உங்களால் இயலாதுபோயின் நீங்களே உங்களது கேட்டை உணர்ந்துகொள்ளுங்களென்று கூறினதுடன்நில்லாமல், சாதாரண ஜனங்களிடம் சென்று சூர்ஆன்ஷரீபின் அர்த்தங்களை புரட்டி மாற்றியமைத்து மனதில் தோன்றியவாறெல்லாம் கூறி மனக்கிளர்ச்சியைக் கிளப்பிவந்தார். இவ்வாறு நடந்துவரும் சின்னட்களுக்குள் போஸ்தான் காதியானி யென்பவர் சமலான் என்ற ஒருவரிடம் சென்று பழக்கம் பாராட்டிவந்தார். காலத்தின் இமாமை ஒப்

யுக்கொள்ளாதவர் ஜாஹிலியத்தான மரணமாய் மரணிப்பார்க ளென்றும், ஆயத்தும் ஹதீதும் பிர்ஸாகுலாம் அஹ்மதை மெய்ப் பிக்கிறதென்றும்; அவரே இக் காலத்தின் இமாமென்றும் போதனைசெய்துவந்தார். இதற்கிடையில் அந்த ரமலான் என் பவரின் பத்தினியை வசப்படுத்தி அம்மாதின் மூலம் ரமலான் என்பவரையும் சம்மதிக்கச்செய்துவிட்டார். அதற்கிணங்க அவர் ஓர் கனவு கண்டுவிட்டாராம். * அதனால் அவரும் காதி யானி மதத்தில் சேர்ந்துகொண்டார். இதையறிந்த முஸ்லிம் களில் பலர் அவரையடுத்து குபிர்மார்க்கத்தில் சேர்ந்துவிட் டீரே இது நியாயமல்லவே உமக்கு ஏதாவது கேட்டு சந்தே கத்தை நிவர்த்திக்கவேண்டுமாயின் எங்களது ஆலிம் சாஹிபு அவர்களிடம் வந்து கேட்டுக்கொள்ளலாம் என்று கூறினதற்கு அந்த ரமலான் என்பவர், முஸ்லிம் சங்கப்பிரமுகர்களுக்கு, என்னிடம் ஏதாவது கேட்கப் பிரியமிருந்தால் கேளுங்கள்; இதற்காக என்னை அழைக்கப்பட் டால் நான் பள்ளிக்குவரத் தயாராயிருக்கிறேனென்று 13–5–25ல் ஓர் கடிதம் விடுத்தனர். இதனைக் கண்ணுற்ற சபா நாயகர் வரலாமென்று தெரிவித்திருந்தும் அவர் வந்தாரில்லை.

சிறிது காலைக்குப்பின் அப்பாஸ் என்பவர் எனக்கொரு நிரூபம் விடுத்தார்.

17–5–25. தகரக்கடை, கம்பளை.

கனம் மீ. சே. உமர்பாட்சா அவர்களுக்கு மாமனூர் அ. அப்பாஸ் எழுதும் செய்தியாவது: நேர்பாதையில் நடப்போ ருக்கு அல்லாஹுத்தஆலா ஈடேற்றத்தைக் கொடுப்பானாக. நான் உங்களையும், உங்களைச் சேர்ந்தோர்களையும் அன்புவைத் திருக்கிறேன். எவ்விஷயம் எனக்குப் பிரியமாயிருக்கின்றதோ அவ்விஷயத்தை உங்களுக்கும் உங்களைச் சேர்ந்தோருக்கும் அறிவிப்பதற்கே என்னிலுள்ள அன்பு தூண்டுகிறது. ஓர் உண்மையான முஸ்லிமுக்கு உலகத்தைப்பார்க்க இஸ்லாமார்க் கமே பெரிதாயிருக்குமென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஏனெனில் உலகவாழ்க்கையோ கொஞ்சகாலத்திற் குறியது. ஆன்மீலோக வாழ்க்கையே நித்தியமானது. ஆண்டவனிடத்

* அவர் குபிர்மார்க்கத்தில் சேர்ந்துவிட்டாரென்பதற்கு இக்கனவே போதிய அத்தாக்ஷியாகும்.

தில் மேலான பதவியைப் பெற்றுக்கொண்டோர்களெல்லோரும் உலகத்தைப்பார்க்க மார்க்கத்தைப் பெரிதாகத் தெரிந்துகொண்டார்களே என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள். ஆனதால் எனது அன்புக்குரிய மகனே! எங்களுடைய உண்மையான இஸ்லாம் மார்க்கத்தில் வருவாரென்று வாக்குச்செல்லப்பட்ட மஹ்தீ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹிஜ்ரி 14-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் முஸ்லிம்களிலிருந்து பாரீஸ் வமிசத்தில் * திபிஷ்க்குக்குக் கிழக்கே காதியான் என்னும் கிராமத்தில் பிரசன்னமாகிவிட்டார்கள். அவர்களை நீங்களும் நம்பி, உங்களைச்சேர்ந்தோர்களையும் நம்பச்செய்யும்படி உங்களிடம் கேட்கிறேன். இந்த உண்மையை நீங்கள் நம்புவீர்களானால், அல்லாஹ்த்தஆலா உங்களுக்கு இரட்டிப்பான வெகுமதிகளைக் கொடுப்பானாக. நீங்கள் இந்த உண்மையை நம்பாதுபோவீர்களானால், உங்களைச் சேர்ந்தோரின் பாபத்திற்கும் நீங்களே உத்தரவாதியாயிருப்பீர்கள். ஆனதால் கிதாபுகளைச்சுமந்த ஆலிம் சாஹிபு அவர்களிடத்தில் உங்கள் சந்தேகமிருந்தால் எங்களையும் கூடவைத்து தெளிந்துகொள்ளுங்கள். தெளிந்துகொள்ள ஓர் முயற்சி எடுங்கள். நாங்கள் அல்லாவையன்றி வேறொருவரையும் வணங்கமாட்டோம். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களைபார்க்க மேலான நபி வேறொருவருமில்லை. நாங்கள் அல்லாவையும், ரசூலையும் உள்ளபடி பின்பற்றுகிற முஸ்லிம்களென்று சாட்சி சொல்லுகிறோம். இப்போதே இதற்கு விடையளிப்பீர்களென்று வழிபார்த்திருக்கிறேன். எனது அன்புள்ள மருமகனே! நன்றாய் யோசித்தும் ஆண்டவன் சமூகத்தில் பக்தியாய் எனக்கு விடையளிக்கவேண்டும். அதிகம் எழுதவில்லை. மறுமொழிபார்த்து எழுதுவேன், இன்ஷா அல்லாஹ்.

இப்படிக்கு அ. அப்பாஸ், அஹ்மதி தகரக்கடை, கம்பளை.

இக்கடிதம்வந்த சிறிதுகாலைக்குப் பின் வேறோர் கடிதம் வாப்பெற்றேன்.

---

* எல்லாப்பட்டங்களையும் தன்மீது சூட்டிக்கொள்ளும்போது பாரிஸ் வமிசமென்ற பெயரையும் விடலாமா? மொகலாய வமிசமென்று அவரே ஒப்புக்கொள்கிறார்.

கம்பளை, அ. அப்பாஸ், } கம்பளை,
அஹ்மதியதகரக்கடை. 20-5-25. } நூர்முகம்மது உமர்பாட்சா.

எனது அன்பும் இரக்கமுமுள்ள மருமகன் அவர்களுக்கு ஆண்டவன் நேர்வழிகாட்டுவானாகவும். நான் சிலகாட்களுக்கு முன் என் சொந்தக்கையெழுத்தால் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு இதுவரையிலும் காக்கலில்லாதமையால் விசனிக்கிறேன். மகனே உங்களிடம் ஒருவன்வந்து * இல்லை யென்று சேட்பானுகில், ஆண்டவனுக்காக இருந்தால் கொடுக்க வேண்டும். கடிதத்திற்கு மறுமொழி அத்தன்மைதான் மகனே நேர்வழியாகிறது ஆண்டவனே வழிப்படுவதே நேர்வழி என்றும் அவனே வழிபடாதிருப்பதே வழிகேடெனவும் ஒவ்வொரு முஸ்லிமும் தைரியமாய்ப் பகர்வர். ஆண்டவனே வழிபடுவதென்பது. ஆண்டவன் புறத்திலிருந்து வருகிறவர்களையும், அப்படிப் பட்டவர்களைப் பின்றொடர்ந்து நடக்கிற தெய்வீகசம்மந்தமுள்ளவர்களையும், பின்பற்றிநடப்பதாயிருக்குமென்று, குர்ஆனை நம்புகிற ஒவ்வொருவரும் கூறுவர். வழிகேடென்பது தெய்வீக சம்மந்த மில்லாதவர்களையும், தெய்வீக சம்மந்த முள்ளோரை வெருப்பவர்களையும் பின்றொடர்வதாயிருக்குமென்று குர்ஆனை வாசித்து விளங்கியவன் நன்றாய் அறிவான். இதன்படி உலகில் எக்காலத்திலும் இரு பிரிவார் உண்டாகிக்கொண்டே வந்திருக்கிறார்கள், ஒருபிரிவார் தெய்வீக சம்பந்தமுள்ளவர்கள். மறு பிரிவார் தெய்வீகசம்பந்தமற்றவர்கள், அதுபோல் இக்காலத்திலும் உண்டாகவேண்டியபடி உண்டாயிருக்கின்றது. தெய்வீக சம்பந்தமுள்ளவர்களில் சமயசாரங்கள் யாதொரு குற்றம் குறையில்லாமலும், சின்னபின்னப் படாமலும், ஒழுங்காயும், திருத்தமாயும் நடந்தேறிக்கொண்டேவரும். ¶ தெய்வீகசம்பந்தம் இல்லாதவர்களின் சமயாசாரங்கள் குற்றங் குறையுள்ளவையும், சின்னபின்னப்பட்டவையாயும், ஒழுங்கும், திருத்தமுமற்றதாயும் கீழ்மையடைந்துகொண்டே போகும். இந்த நியாயத்தின்படி ஆண்டவன் புராதனிலிருந்துவாக்குச்சொல்லப்பட்ட

* இப்படியே கடிதத்திலிருக்கிறது. ஏதாவதொன்று கேட்பானுகில் என்றிருந்தால் பொருத்தமாகும்.

¶ இதை ஆதாரதோணியில் பார்க்கலாம்.

மஸீஹ் (அலை) அவர்கள் பிரசன்னமானார்கள். அவர்களைப் பின் பற்றினோரின் சமயாசாரம் திருத்தமாயிருக்கிறது. அவருக்குப் பின் கலிபாக்களைக்கொண்டு ஆண்டவன் அவ்வேலையை நடத்து கிறார். ஆனதால், இவர்களுக்கே ஆண்டவனின் முடுகிய சம் பந்தமிருக்கிறது யாதொரு கருமத்தையும் இவர்களுக்கு ஆண் டவன் படித்துக்கொடுப்பார். தெய்வீக சம்பந்தமற்றவர்களுக்கு ஆண்டவன் படித்துக்கொடுக்காதபடியால், அவர்கள் ஒவ்வொரு வரும் தத்தம்நாட்டத்துக்குவந்தபடி மார்க்கக்கருமத்தைநடத்து கிறார்கள். அதை அவர்களைச் சேர்ந்தோர்களும் கூட பிழை யென்று சாட்சி பகருகிறார்கள். * இதெல்லாம் ஏன்? தெய்வீக சம்பந்தமுள்ளவர்களைப் பின்பற்றுச்குறையினல் உண்டானது. தெய்வீகசம்பந்தமுள்ளவர்களுக்கு ஆண்டவன் தெரியாத விஷ யத்தைப் படித்துக்கொடுப்பான்; என்ற நம்பிக்கை இவர்களுக் கில்லாமல் போனதேன்? காரணம் இவர்கள் ஆண்டவனை விட் டும் வெகுதூரப்பட்டுவிட்டார்கள். ஆனதால், இவர்கள் செய்த தெல்லாம் பிழையும் குறையும் ஆகவே காணப்படுகிறது. சில ஆலிம்கள் அஹ்மதியத்தின் விஷயத்தை உள்ளபடி விளங்கா பேதமையினலும் பரிசுத்த குர்ஆனைப் படித்திருந்தும் மூடப் புத்தியினலும் இஸ்லாமார்க்கத்தை தெரியா மடமையினலும் அஹ்மதியத்துக்கு விரோதமாயும், பரிசுத்த குர்ஆனின் தீர்க்க தரிசனங்களையும், இஸ்லாமார்க்கத்தையும் நிராகரிப்பதாயிருக் கின்றது. இன்னும் ஆதியிலேயிருந்து கடைசிகாலத்தில் இஸ் லாமில் ஈஸா நபி (அலை) அவர்கள் வருவார்கள் என்று நம்பிக் கொண்டுவந்தவர்களாயிருந்தும், இப்போது ஈஸா நபி (அலை) அவர்கள் இஸ்லாமில் வந்தபின்பு அதை மறுத்து வரமாட் டார்களெனச் சொல்லி இஸ்லாமை (கவுதுபில்லாஹ்) பொய் யெனக் காட்டி இழிவுபடுத்துகிறார்கள். இப்படிப்பட்ட இஸ்லா மின் விரோதிகளை பின்தொடலாமா? பிற்காலத்தில் ஈஸா நபி வருவாரானென முஸ்லிமான ஒரு பையனிடம் கேட்டபோதும் ஆம் வருவாரென்றே முறுமொழி சொல்வான். அப்படியிருக்க மேற் சொல்லப்பட்ட ஆலிம்கள் இதைக் கவனியாமலிருப்பது, இஸ்லாத்தை நிராகரிப்பதா? அல்லது அஹ்மதியத்தை நிரா

* இம் மஸீஹின் வாக்கியங்களை அவர்களது சேடர்கள் பிழையென எண்ணித்தால் தெய்வீகசம்பந்தமற்றவரெனக் கூறலாமா?

கரிப்பதா? சிந்தித்துப்பாருங்கள், இன்னும் உலகத்தில் குருடராயிருப்பவன் ஆகிரத்திலும் குருடராயிருப்பானென்று ஆண்டவன் சொல்லியிருக்க அதைக்கவனிக்காமலிருப்பதேன்? நாங்கள் கெடுநாள் இருக்கப்போகிறவர்களல்லவே, நாங்கள் ஆண்டவன் சமூகம் போகவேண்டியவர்களாயிருக்கிறோமே (கைருல் மக்ஜபி) என்ற கூட்டத்தில்சேராமல் ஆண்டவன் எங்களை (விரும்தல்லதீன அன்அம்த அலைஹிம்) யென்ற அவன் உகந்த கூட்டத்தில் சேர்ப்பானாக. இதை விளங்க விருப்பமும் ஆசையும் தாங்களுக்கு இருந்தால் நல்லஆலிம்கள் சங்கைவான்கள்முன்பாக ஓர் சபைகூட்டிப் பேசினால் ஆண்டவன்கிருபையால் அநேக மனிதர்களுக்கும் உள்ளமை இன்னதென விளங்கிக்கொள்வார்கள். இதின் பலன் இம்மையிலும் மறுமையிலும் ஆண்டவன் பிரதி பலன் அளிப்பானாகவும். உலகமோ * ஜஜ்ஜாலுடைய மாய்கையான மிரட்டுதலுக்கு வந்திருக்கிறது. அதின் குணம் உங்களை மனிதர்கள் எங்களுடன் பேசாதிருக்கச்செய்வார்கள். இன்னும் சொர்க்கம் சுண்ணமலியிலும் அவர்கள் கையிலும்தான் இருக்கிறதென்றும் சாடைகாட்டுவார்கள். குர்ஆன் உடைய தாலீலில்லாமல் அவர்கள் சொர்க்கவாதி, இவர்கள் நரகவாதி என்று திடகூறுகவும் சொல்வார்கள். சட்டத்தைப்பாராமல் வட்டியும் வாங்குவார்கள்; ஜனவும் செய்வார்கள்; திரும்பவும் அவர்கள் பெரிய ஷேக்மார்களென்றும் சொல்வார்கள்; மூரீது கொடுப்பார்கள். அவர்களைத்தான் ஜஜ்ஜால் உடைய தோழர்களென்று மனதில் நினைத்து நபிநாயகத்தின் செயலும் ஆண்டவனுடைய சொல்லுக்கும் மாற்றமில்லாமல் நடக்கிறவர் யார் என்றும் விழுங்க அதிகத் தேவையிருந்தால் ஆண்டவனே அதற்கு உதவி செய்வான்.

இப்படிக்கு அ. அப்பாஸ் அஹ்மதி.

இக்கடிதத்தில் இந்த அப்பாஸ் அஹ்மதியென்பவர் மிர்ஸா குலாம் அஹ்மது வாக்குச்சொல்லப்பட்ட மஹ்தி, மஸீஹென்றும் இவரை விசுவாசியாதோர் தெய்வீகசம்பந்தமற்றவர்களென்றும் ஆலிம்கள் குர்ஆன் ஒதியும் விளங்கத்தெரியாத மடையர்களென்றும் கிதாபுசுமந்தவர்களென்றும் இதைவிஜாரித்தறிய உங்

* கடிதத்தில் கண்டபடியே எழுதப்பட்டிருக்கிறது.

களின் மௌல்விகளையும் எங்களின் மௌல்விகளையும் கொண்ட ஓர் சபையைக்கூட்டி உண்மையை விளங்குங்களென்றும் இதற்கு அதி சீக்கிரம் முயற்சிசெய்யுங்களென்றும் மிக வற்புறுத்திக் கூறியுள்ளார். இக்கடிதம் இரண்டையும் யான் கம்பளை முஸ்லிம் சங்கத்தாரிடம் ஆஜர்படுத்தினேன். அதன்மீது அவர்கள் அதி விரைவாக ஒரு கூட்டம் கூட்டி இதைப்பற்றியாலோசித்து மிர்ஸாயிமதத்தின் சரித்திரங்களைச் செவ்வனே உணர்ந்த ஒரு ஆலிமைத் தருவித்து இதன் உண்மையை உணரவேண்டுமெனத் தீர்மானித்து, தென்காசி மூலல்மான் ஆசிரியர் கனம் மீ. இ. முஹம்மது அப்துல்காதிர் சாஹிப் அவர்களுக்கு லெட்டர் எழுதினர்கள். அவர்கள் அச் சந்தர்ப்பத்தில் சுகவீனமாயிருந்தும் தாம் வருகிறதாக ஒப்புக்கொண்டபடியால் அவர்களை சங்கத்தின் சார்பாக அழைக்கப்பட்டது. அவர்களும் இதற்கிணங்கி உடனே புறப்பட்டு கம்பளைவந்து சேர்ந்தார்கள் அவர்களை வரவேற்று ஜும்ஆவில் பிரசங்கம்புரிய ஏற்பாடுசெய்யப்பட்டது. இச்செய்தியை நோட்டீஸ்மூலமாய்ப் பக்கங்களிலுள்ள பல ஊர்கட்டும் அறிவிக்கலாயிற்று.

மறுநாள் முஸ்லிம்கள் ஆலோசித்து காதியானி நண்பர்களின் அழைப்புப்படி அவர்களையழைத்து இவ்விவாதத்தை முடிவுசெய்யலாமெனக் கருதி ஓர் நோட்டீஸ் கொடுக்கலாயினர். அது வருமாறு:

கம்பளையில் மூலல்மான் ஆசிரியர்

சொற்பகாலமாக முஸ்லிம்களில் சிலர் காதியானி அஹ்மதியமதத்தில் சேர்ந்துகொண்டு நாங்களே மோக்ஷம் பெற்றவர்களென்றும் மற்ற முஸ்லிம்கள் எங்கள் நபியாகிய மிர்ஸா குலாம் அஹ்மத் என்பவரை நபியென்றும் மஸீஹென்றும் விசுவாசியாதவரை காபிரென்றுக்ஷித்திற்குரியவர்களல்லவென்றும் நிந்தித்துவந்ததுடன், யாங்கள் கேட்கும் கேள்விகட்கு விடை பகர நிறமையுடையோர் உங்களில் யாரேனுமிருந்தால் கூறுங்கள் யென்றும் வாதம்புரிந்துவந்தனர். அன்றியும் முஸ்லிம்களின் கலகத்தையும் பிரிவினைகளையும் உண்டுபண்ணுவதில் பலவழிகளிலும் பின்வாங்கவில்லை. இக் குழுவாத்தினரின் கெட்ட கோட்பாடுகளையும் வீண் பிடிவாதங்களையும் அகற்றுவதில் பன்முறை

யும் வேதபோதனைகளால் விளக்கிக்காட்டியும் தங்கள் சாதனைகளைவிட்டு நீங்கினபாடில்லை. ஆதலால் இன்னவர்களை நல்லவிதமாக அறிவுறுத்தவும், காதியானி கோட்பாடுகளின் தவறை விளக்கிக்காட்டி சன்மார்க்கத்தில் அழைக்கவும் முஸ்லிம் பொதுஜனங்கள் நெறிவழுவாமல் காத்துக்கொள்ளவும்,

தென்காசி ஜனுப் முஸல்மான் ஆசிரியரவர்கள்
கம்பளை டவுண் முஸ்லிம் சங்கத்தாரால்

வரவழைக்கப்பட்டார்கள். கனம் ஆசிரியரவர்கள் இவ்வழைப்புக்கியைந்து தங்களது நிரேக அசௌகரியங்களையும் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது இங்கு விஜயம்செய்தனர். இவர்களின் வரவையும் ஜும்ஆவுக்குப்பின் பிரசங்கம் புரியநிச்சயித்திருப்பதையும் கோட்டல்வாயிலாக சகலருக்கும் சிற்றாரார்கள் உள்பட அறிவிக்கப்பட்டது. இதைக் கேள்வியுற்ற அக்கம்பக்கத்து ஊரார்களும் இவ்வரிய பிரசங்கத்தைச் செவியுறறு மகிழ கம்பளை டவுண் பள்ளிக்கு வந்து குழுமினர். அப்பால் ஜும்ஆ தொழுகைக்குப்பின் ஜனுப் முஸ்லிம்சங்கக் காரியதரிசி அவர்கள் எழுந்து கனம் முஸல்மான் ஆசிரியரவர்களைத் தருவித்த நோக்கத்தை ஜன சமுகத்திற்கு தெரிவித்துவிட்டு உட்கார்ந்துவிட்டார்கள். பின்னர் ஜனுப் முஸல்மான் ஆசிரியர் எழுந்து முஸ்லிம்களின் நிலைமையைப்பற்றி பேசிவருங்கால், மிர்ஸா சாஹிபின் சரித்திரத்தையும் விளக்கிக்காட்டினர்கள். அதாவது: காதியான் மிர்ஸாசாஹிப் ஆரம்பத்திலிருந்து அவர் கல்விகற்றதும், உத்தியோகத்தில் அமர்ந்ததும் பரீட்சையில் தவறிவிட்டதினால் அதைவிட்டுவிட்டு மதச்சேவைபுரிய ஆரம்பித்ததும், அப்பால் பொதுஜனங்களிடம் பணம் வசூல்செய்து பராஹீன அஹ்மதியா வென்ற ஓர் நூல் இயற்றினதும், அதில் நடந்த சூட்சிகளையும் சம்பிரதாயங்களையும், பின்னர் தன்னை "முஜத்தித்" என்றும், நபியென்றும், ரசூல்யென்றும், ரசூல் மார்களைவிட சிறந்தவனென்றும் வாதித்த விஷயங்களையும் மிக தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

இன்னும் அவர் (மிர்ஸா சாஹிப்) செய்த முன்னறிக்கைகளில் விண்ணுலக விவாகத்தால் கேர்ந்தகதியும் ஆத்தம்பாதிரியாரோடு மதப்போர் தவக்கி பெற்றுக்கொண்ட சிறுமையையும்

ஜனங்களின் மனதில் பதியுமாறு அதி விளக்கமாய் விபரித்தார் கள். இறுதியில் அவர் (மிர்ஸா) இன்னும் பல பொய்கள் கூறி யிருப்பதாகவும் சொல்லி முடித்தனர். அச்சமயம் சபையின்கண் வீற்றிருந்த ஒரு பெரியார் ஜனப் ஆசிரியரவர்களே விளித்து, தாங்கள் சொன்னவிஷயங்களால் காதியானிமத இரகசியம் நமக்கு நன்கு புலப்பட்டது. என்றாலும் இப்போது கூறப்பட்ட படி மிர்ஸா சாஹிபின் பொய்களே ஆதாரத்தோடு கேட்டும் பகூம் ரூபிக்கமுடியுமாவென்க, கனம் ஆசிரியரவர்கள் முடியு மென்றார்கள். உடனே ஜனப் காரியதரிசி அவர்கள் எழுந்து இங்குள்ள காதியானி நண்பர்கள் மிர்ஸா சாஹிபைப்பற்றிய தங்களது சந்தேகங்களே நிவர்த்தித்துக்கொள்ள இதுவே தக்க சமயமென்றும், இன்னும் பல உபந்நியாசங்கள் நடத்தப்படு மாகையால் தாங்கள் யாவரும் சமூகம் தரவேண்டுமென்றும் சொல்லி உட்கார்ந்தார். சபை சலவாத்துடன் முடிவுபெற்று கலைந்தது.

பஹிரங்க அழைப்பு.

காதியானி நண்பர்காள்! நீங்கள் முஸ்லிம்களே குறைகூறி காதியானிமதத்தில் அழைக்கின்றீர்கள். ஆயினும் தங்களதுகா தியானி நபி பொய்யரென மேற்கண்டஉபதேசத்தால் நன்குதெரி ந்துகொண்டோம். அவர் பொய்யரல்லவென்றும் இஸ்லாமானவர் தானென்றும், வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹ¤ம், மஹ்தியும் இவர்தானென்றும் நீங்கள் ருஜ¤ப்படுத்தும் பகூம் நேர்நேராக வந்து எழுத்துமூலமாக ஒழுங்குப்படி வாதம்புரிய உங்களே அழைக்கின்றோம். இந்த நோட்டீஸ் பிரப்பித்ததிலிருந்து (15) நாள்வரை இதற்குத் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை இத்தால் தெரியப்படுத்தியிருக்கிறோம். எ காதியானி அன்பர் களே! உங்களது மிர்ஸாநபியின் தத்துவத்தை அறிவதற்கு இது தக்கசமயமாதலால் இச் சந்தர்ப்பத்தை நழுவவிடமாட்டீர்க ளென நம்புகிறோம்.

கம்பளை
17-7-25.

இங்ஙனம்
M. S. N. உமர்பாகூா.

இந்நோட்டீசை எங்கும் பஹிரங்கப்படுத்திவிட்டு கா.தி. யானிகளின் சரித்திரத்தையும் அவ்விஷயிகளின் நடத்தையை

யும் செவ்வையாய் பொது ஜனங்களுக்கு விளக்கும்பொருட்டு கண்டி ரோட்டிலுள்ள ஜனப் ஷாஹுல்ஹமீது அவர்களின் கடையில் பிரசங்கம்புரிய ஏற்பாடுசெய்யப்பட்டது. இவ்விதம் இரண்டு மூன்று பிரசங்கம் நடந்தபின் காதியானி அப்பாஸ் என்பவரால் ஒரு கடிதம் வரப்பெற்றேம்.

எனது பிரியமுள்ள மருமகன் மீ. சே. நூ. உமர்பாட்சா அவர்களுக்கு ஆண்டவன் கிர்வழியைவிழங்கப்படுத்திக்கொடுப் பானகவும். இதற்குமுன் நான் தங்களுக்கெழுதிய நிரூபத்தைப் பற்றி தாங்களெடுத்த முயற்சியால் கம்பளி டவுண் முஸ்லிம் சங் கத்தார்கள் இந்தியாவிலிருந்து மௌல்வி மீ. இ. முஹம்மது அப்துல்காதிர் ஆலிம் சாஹிபு அவர்களை வரவழைத்திருக்கிறார் கள் ஆகையால் நம் மிருதாத்தாரின் நம்பிக்கைவித்தியாசத்தை விளங்கிக்கொண்டு சகோதரபாந்துவமாக ஒரே ஆண்டவனை நம் மெல்லோரும் வணங்க ஆண்டவன் நற்கிருபை செய்வானுகவும் இத்துடன் கனம் ம. செ. அவர்களுக் கெழுதிய லிகிதத்தின் நகல் 1- தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்.

27-7-25. இப்படிக்கு அ. அப்பாஸ்.

நகல்

கனம் ம. செ. செய்யிதுமுகம்மது அவர்கட்கு ஆண்டவன் கிர்வழியை விளங்கப்படுத்திக்கொடுப்பானகவும்.

இப்பவும் கம்பளி டவுண் முஸ்லிம் சங்கத்தாரின் வேண்டு கோளுக்கிணங்கி இந்தியாவிலிருந்து தென்காசி, முஸல்மான் ஆசிரியர் ஜனப் ஹஸ்ரத் மௌலானு மௌல்வி, மீ. இ. முஹம் மது அப்துல்காதிர் ஆலிம் சாஹிப் அவர்கள் இவடத்துக்கு விஜயஞ் செய்திருக்கிறதைக் கேட்டு மிகவும் சந்தோஷப்பட லானேன்.

அவர்களால் சென்ற வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப் பின் கம்பளி டவுண் பள்ளியில் முஸ்லிம்களின் நிலைமை என்ற ஓர் பிரசங்கம் செய்யுந்தருணத்தில் கனம் தங்கிய தாங்கள் சபையி லெழுந்து மெடி ஹஜ்ரத் மௌலானு மெடி பிரசங்கத்தில் வெளி யான குறிப்பிட்ட சில வாக்கியங்களைக் குறித்து அவ்வாக்கியங் களை எம்பிணைசெய்யக் கூடுமா என்று கேட்ட கேள்விக்கு நான் தங்களுக்கு நன்றியுடையவனுயிருக்கிறேன்.

மேலும் நாளது மாசம் 20-ம் தெய்தி இரவு கண்டி ரோட்டில் நடத்திய பிரசங்கத்திலும் வெளியான சில குறிப்பிட்ட வாக்கியங்களைப்பற்றியும் அஹ்மதியர் எதிர்முகமாக அவ்வாக்கியங்களையும் எம்பிணைபண்ணுவீர்களா என்று கேட்டதற்காகவும் தங்களுக்கு நன்றியடைகிறேன்.

ஆகிலும் நம் மிருதரத்தாரின் இடையிலிருக்கும் நம்பிக்கை வித்தியாசமாவது, ஈஸா (அலை) வானலோகத்திலிருக்கிறார்களென்பதும், அல்லது எங்களுடைய நம்பிக்கையின்படி காலஞ் சென்றுவிட்டார்களென்பதுவே. இவ்வித்தியாசத்தை தெரிந்து கொள்கிறதற்காக மௌலவி ஹஸ்ரத் அவர்களையும் எங்களுடைய பரிசத்தில் ஹஸ்ரத் மௌல்வி A. P. இப்ராஹீம் சாஹிப் அவர்களையும் ஏற்படுத்தி ஒரு பொதுவிடத்தில் ஒரு குறித்தினத்தில் ஓர் கூட்டம் கூடி இருதரத்தாரும் கலந்துபேசி இவ்வித்தியாச விஷயத்தை நிவர்த்திசெய்துகொண்டு நம்மெல்லோரும் ஒத்துமையாகவும் சகோதர பாந்துவமாகவும் யிருந்து ஒரே ஆண்டவனையே நாமெல்லோரும் வணங்கும்படி ஆண்டவன் நற்கிருபைசெய்வானாகவும்.

இப்படிக்கு A. அப்பாஸ்.

இக்கடிதத்திற்கு உடனே பதிலெழுதப்பட்டது.

22-7-25 அ. அப்பாசுக்கு யெழுதம்செய்கியாவது தாம் யெழுதிய கடிதத்தைப்பார்த்துக்கொண்டேன். அதற்கு விபரம் இத்துடன் நோட்டீஸ்வருகிறது. பஹிரங்க அழைப்பு என்ற பாராவில்கண்ட விஷயங்களைக் கவனித்துக்கொள்ளவும்.

ம. சே. செய்யிதுமுஹம்மது.

இதற்குப்பின் காதியானி மதஸ்தரின் கீழ்கண்ட நோட்டீஸ் கிடைத்தது.

கம்பளைடவுண் முஸ்லிம் சங்கத்தாரின் பஹிரங்கஅழைப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டோம்.

''கம்பளையில் முஸல்மான் ஆசிரியர்'' என்னும் தலையங்கத்தின் கீழ் 17-7-25ல் பிரசுரிக்கப்பட்ட ஓர் அறிவித்தல் 21-ம்வ எங்களுக்குக் கிடைத்தது. அதில் முதலாவது எங்களைக் கலகக்காரர்களென்றும், பித்னாசெய்வோரென்றும் ஓர் முழுப்

பொய்யை வரைபப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கு உலகத்தை யும் பித்னாக்களையுமுண்டுபண்ணுவோர் யாரென்ற கேள்விக்கு விடைபகரும்படி இங்குள்ள உண்மை மனமுடையோருக்கே ஒப்புவிக்கின்றோம். பொய்யர்களுக்கே தெய்வசாபமுண்டாகும்.

இதைத்தவிர அதில் இன்னுமநேக விஷயங்களை வரையப் பட்டிருக்கின்றது அவற்றுக்கு விடையெழுத இங்கு தேவை யில்லை. ஆனால், உண்மையை இருநிறத்தாரும் வெளிப்படுத்து தற்கு அந்த அறிஞர்களின் மூலமாக எங்களை அழைத்திருக் கின்றார்கள். அதின்பேரில் நாங்கள் அவர்களை மனதாரத் தெரி செய்துவைத்தாடு மிகச் சந்தோஷமாய் அதை அங்கீகரிக்கின் றோம். அதன்படி நடத்தவேண்டிய விஷயங்களை கீழே தரு கின்றோம்.

முதலாவது ஈஸா(அலை) அவர்கள் மரணிக்கவில்லையா என்ற விஷயமாகும். இதை முதலாவது பேசவேண்டியவர், அவர் உயி ரோடிருக்கிறாரென்று வாதிக்கிறவராயிருக்கவேண்டும். அவருக்கு 1-மணி தியாலமும், அதற்கு மறுமொழி கொடுப்பவருக்கு 1-மணித்தியாலமும் கொடுக்கவேண்டும். அதன்பின் இருவருக் கும் முறையே ½-மணித்தியாலம் கொடுக்கவேண்டும். இவ்வாறு முடிந்தபிறகு இன்னுமோர் நாவில் வாக்குச்சொல்லப்பட்டவர், இந்த உம்மதிலிருந்தே வரவேண்டும். அவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களாகும். என்பதைப்பற்றிப் பேசவேண்டும். அதை முதலாவது பேசுவோர் நாங்களை. அதைப்பேசுகிற எங்களுக்கு 1-மணித் தியாலமும், அதை மறுப்பவருக்கு 1-மணித்தியாலமும் கொடுக்கவேண்டும். பிறகு இருவருக்கும் முறையே ½-மணித்தியாலமும்கொடுக்கவேண்டும். மேற் காட்டப்பட்ட இரு விஷயங்களையும் சூர்ஆனைக்கொண்டும், அதற்குச்சரியான ஹதீஸ்களைக்கொண்டும் பேசவேண்டும்.

எங்கள் பக்கத்தால்பேசுவதற்காக இலங்கை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமும் போதகருமாகிய,

ஜனாப் மௌல்வி எ. பி. இப்ராஹீம் சாஹிப் அவர்கள் வர் திருக்கிறார்கள். இவ்விஷயத்தை நடத்துவதற்கு இருபகுதியா ரும்பிரியப்பட்டு ஓர் அக்கிராசனரை நேமிக்கவேண்டும்.

அவரது வேலை சபையை ஒழுங்காய் நடத்துதல்மாத்திரமே. ஒருவர் பேசும்போது இடையில் எவரும் பேசக்கூடாது.

இதை நடத்தமிஸ்தானம் இருபகுதியாரும் பிரியப்பட்ட பொதுவானவிடமாயிருக்கவேண்டும். இதை நடத்துதற்கு இரு பகுதியாரும் அரசாங்கத்தாரிடம் உத்தரவையும், உதவியையும் பெறவேண்டும்.

இதை நடத்துதற்கு ஞாயிற்றுக்கிழமைகளில் பின்னேரம் 2-மணிமுதல் 5-மணிவரையில் நேமிக்கவேண்டும். இதை வெளிப்படுத்தியவுடனே மேற்படி சபையாருக்கு இதை ரிஜிஸ்டர் செய்து அனுப்புகின்றோம். அதிலிருந்து அவர்களுக்கு (18) நாள் தவணை கொடுக்கிறோம். அதற்குள் அவர்கள் முன் வந்த விஷயத்தை நிறைவேற்றுவார்களென்றும் நம்புகின்றோம்.

33-புஸல்லாவரோட், கம்பளை. 24-7-25

மஹ்தி அலிஹஸ்ஸலாம் அவர்களின் கீழான ஊழியன் A. அப்பாஸ் அஹ்மதி

இதை வாசிக்கும் சகோதரர்களே! மேற்கூறிய நோட்டீஸில் காதியானி நண்பர்கள் முஸ்லிம்களால் கொடுக்கப்பட்ட பகிரங்க அழைப்பை ஏற்றுக்கொண்டோமென்று கூறிக் கொண்டு உண்மையை ஒழிக்கிறார்களல்லவா? ஆதலின், நமது பஹிரங்க அழைப்பை மீண்டும் இங்கு குறிப்பிடுவதை நேயர்கள் கவனிக்குமாறு வேண்டுகிறேன்.

காதியானி நண்பர்காள்! நீங்கள் முஸ்லிம்களைக் குறைகூறி காதியானி மதத்தில் அழைக்கின்றீர்கள். ஆயினும் தங்களது காதியானிநபி பொய்யரென, மேற்கண்ட உபதேசத்தால் நன்கு தெரிந்துகொண்டோம். அவர் பொய்யரல்லவென்றும், இஸ்லாமானவர்தானென்றும், வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹும், மஹ்தியும் இவர்தானென்றும் நீங்கள் ருஜூப்படுத்தும் பக்ஷம் நேர்நேராகவந்து எழுத்தமூலமாக ஒழுங்குப்படி வாதம்புரிய உங்களை அழைக்கின்றோம். இந்த நோட்டீஸ் பிறப்பித்ததிலிருந்து (15) நாள் வரை இதற்குத் தவணைகொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை இத்தால் தெரியப்படுத்தியிருக்கிறோம். ஏ காதியானி அன்பர்களே! உங்களது மிர்ஸாநபியின் தத்துவத்தை அறிவதற்கு இது தக்கசமயமாதலால் இச் சந்தர்ப்பத்தை நழுவவிட மாட்டீர்களென நம்புகிறோம். இங்ஙனம்.

M. S. N. உமர்பாகூா, கம்பளை.

இவ்விதம் அவர்கள் மெய்யை மறைத்து பொது ஜனங்களை ஏமாற்றச்செய்யும் கபடச்சூழ்ச்சிகளை முஸல்மான் ஆசிரியர்மூலம் நன்கு விளங்கிக்கொண்டோம். காதியானி மிர்ஸாகுலாம் அஹ்மது சாஹிபை பொய்யரா; நபியா; முஸ்லிமாவென்று சோதனை புரிவோமென்றல், இதைக் கவனியாது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப்பற்றித்தான் முதல் வாதிக்கவேண்டுமென்பதில் பல சூழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப்பற்றி குர்ஆன் ஹதீதின்படி முஸ்லிம்களின் நம்பிக்கை எற்பட்டிருக்கிறது தெரிந்தவிஷயம். காதியானிகளின் சொற்படி ஒரு வினாடிகை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமாய் விட்டார்களென வைத்துக்கொண்டாலும் மீண்டும் மிர்ஸா ஸாஹிப் மஸீஹா, நபியா, பொய்யரா, முஸ்லிமாவென்ற ஓர் ஆராய்ச்சி யிருக்கிறதென்பதை மறுக்கவியலா. ஆகலின் ஓர் முடிவு வரவேண்டுமாயின் மிர்ஸா ஸாஹிபைச் சோதனைசெய்தாலன்றி ஏற்படப்போவதில்லை என்பது சிறுவர்களும் அறியக்கூடிய உண்மை. இதற்காகவே பற்பல தர்க்கங்கள் நடத்தி காலத்தை வீணே கழிப்பதைவிட ஒரே ஆராய்ச்சியில் உண்மையைக்கண்டு கொள்ளலாமென்பது உங்களின்வாதம். இதை நிர்க்காலோசனை செய்ததின் காதியானி நண்பர்களுக்கு இரண்டாவதோர் அறிக்கை கொடுக்கப்பட்டது.

காதியானி நண்பர்களுக்கு இரண்டாவதோர் அறிக்கை.

24-7-25ல் பிரசுரமான எ. அப்பாஸ் அஹ்மதி என்பவரால் கைச்சாத்திடப்பட்டு வெளியான நோட்டீஸ் ஒன்று எமக்கு எட்டியது. அதனைக் கண்ணுறும்போது எம்மால் 17-7-25ல் கொடுக்கப்பட்ட அழைப்பைச் சிறிதும் கவனிக்காமல் மனம் போனபடி எழுதப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. எமது அழைப்பு நோட்டீஸில் மிர்ஸா ஸாஹிப் நபியா, முஜத்திதா, தரூலா, மஸீஹா, மஹ்தியா, அல்லது பொய்யரா, அவர் ஒரு முஸ்லிமா? என்ற விஷயத்தை ஆராய காதியானி நண்பர்களை அழைக்கப்பட்டிருந்தது. இதை மறைத்துக்கொண்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் விஷயமாய் வாதிக்க எடுத்துக்கொள்வது அவசியத்தில்ச் சேர்ந்ததல்ல. மிர்ஸா ஸாஹிப் கூறுகிறார், மஸீஹ் இறங்குகிற விஸ்வாசம் நமது ஈமானின் ஒரு பிரிவென்

றும், அல்லது மார்க்கங்களின் முக்கியாம்சங்களினின்றும் ஓர் அம்சமுமல்லவென்றும் (இஸாலா முதற்பாகம் 60–பக்கம்) கூறுகிறார்.

ஏ, காதியானி நண்பர்களே! உங்களது நபியின் வாக்கியப் படி ஈஸா (அலை) அவர்கள் இறங்குகிற விஸ்வாசம் முக்கியமல்ல லென்று தெரிந்துகொண்டதல்லவா? ஆதலின் இதை விட்டு விட்டு முக்கியமென்று கூறக்கூடியதும், குபிர் என்று விளம்பக் கூடியதுமான, மிர்ஸா ஸாஹிபைத்தான் சோதனைசெய்ய எடுத் துக் கொள்ளவேண்டும். ஏனெனில் அவர்கூறியபடி அவரை நம்பாதோர் காபிர்களென்பது அவசியவாதம். ஆகலால் முதன் முதல் குபிரை ஆராய்ச்சிசெய்துவிட்டு, அப்பால் அடுத்தபடி யாக எந்த விஷயத்தையும் எடுத்துக்கொள்வதே உண்மை விரும்பிகளின் கடமையாகும். வாதம்புரியக்கூடிய நியாயமான எல்லா நிபந்தனைகளையும் ஆதரிக்கிறோம். எனினும் மத்தியஸ் தர் எழுத்துமூலியமாக தமது அபிப்பிராயத்தையும் வெளியிட வேண்டும். இதுவே எமது முடிவு.

காதியானி நண்பர்களே! உடனே உங்களது நபியைச் சோதனைபுரிய முன்வாருங்கள். இதை விட்டுவிட்டு வேறுவழி நடப்பீர்களாகில் உங்களது நபி பொய்யரென நீங்கள் அங்கீ கரித்துக்கொண்டதாக நேரிடும். அவ்வாறு நாம் கருதுவதை நீங்கள் ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அடுத்தவிஷயத்தைப்பற்றி வாதம்புரியத் தயார்; உடனே முன்வருவீர்களாக.

ஜனப் மூஸல்மான் ஆசிரியரவர்கள் சென்ற துல்ஹஜ் மீ மூஸல்மான், 343-ம் பக்கத்தில் காதியானி மௌல்வி எ. பி. இப்ராஹீம் சாஹிபிடம் வினவிய (6) கேள்விகளுக்கு விடை யிறுக்காது வாதம்புரிய வந்ததைப்பற்றி சந்தோஷப் படாம லிருக்கமுடியாது. இனிமேல் இவ்வாறு நோட்டீஸ்கள் பிரப் பித்துக்கொண்டு வீணே காலங்களிக்கக்கூடாது. நமது கம் பளீ டவுண் முஸ்லிம்சங்கத்தின் காரியதரிசியிடம் வந்து நடந்து கொள்ளவேண்டியதற்கு ஏற்பாடு செய்துகொள்ளவேண்டியது.

கம்பளீ
25-7-25. } இங்ஙனம், மீ செ. நூ. உமர்பாக்ஷா,
பொக்கிஷதார்; கம்பளீடவுண் முஸ்லிம்சங்கம்.

இதைப் பார்த்தபின் காதியானி நேயர்கள் ஓர் நோட்டீஸ் பிறப்பித்தார்கள்.

கம்பளையில் தென்காசி முஸ்லிம் ஆசிரியரைச் சேர்ந்தோரின் இரண்டாவது அறிக்கைக்கு விடை.

25—7—25 ல் கனம் மீ. செ. நூ. உமர்பாகூர் அவர்கள் வெளிப்படுத்திய அறிக்கை யொன்று நமக்கு வழியில் கிடைத்தது. நம்மால் பிரசுரிக்கப்பட்ட அறிக்கையை மேற்படி கனவான் அவர்களுக்கு ரிஜிஸ்டர்செய்து அனுப்பியிருந்தோம், அவருடையதை, அவ்விதமாவது, எவ்விதமாவது எமக்குக் கிடைக்கச்செய்யவில்லை. எங்கள் அறிக்கையில் வாதம்புரியும் முறைகளைக் காண்பித்திருந்தும், அவரது அறிக்கையில் அவற்றிலொன்றேனும் அங்கீகரித்ததாகக் காட்டவில்லை. அவ்வாறிருக்க அதில் "வாதம்புரியக்கூடிய நியாயமான எல்லா நிபந்தனைகளையும் ஆதரிக்கிறோம்" என்று வரைந்திருக்கின்றார். இதன் கருத்தென்ன, எங்களால் காட்டப்பட்ட நிபந்தனைகள் உங்களுக்குச் சரியில்லையெனக் காணப்பட்டால் வாதம்புரிவதற்குரிய சரியான நியாயங்களை நாங்கள் காட்டியதுபோல், நீங்களும் காட்டவேண்டுமல்லவா? அதுதான் வாதம்புரிய ஆயத்தமும், தைரியமுமுள்ளோரின், இலக்ஷணம் அதற்கு மாற்றமாக மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு அஹ்மதிகள் என்று அழைக்கப்படுகிற எங்களை ஏ! காதியானி என்பதுபோன்ற வசனங்களைக்கொண்டு அழைக்கிறீர்கள்; இப்படிப்பட்ட நீங்கள் தானே வாதம்புரியக்கூடிய நிபந்தனைகளின்படி சமாதானமாய்ப் பேச முன்வருகிறவர்கள், வாதம்புரியுமிடத்திலும், உங்கள் நியாயமான நிபந்தனைகளும் இதுபோல்தானிருக்குமென்பதில் என்ன சந்தேகம்? ஆனதால், உங்கள் மனதிலிருக்கும் நிபந்தனைகள் எவ்விதமானவை யென்று ஒருவருக்கும் நம்பமுடியாது. இப்போது நீங்கள் ஆண்மைத்தனமாக, எங்கள் முக்கின அறிக்கையிலுள்ள நிபந்தனைகளை யொப்பிக்கொண்டு உண்மையைத் தேடுவோருக்கு இவ்விஷயத்தை தெளிவுபடுத்த முன்வாருங்கள். ஈஸா (அலை) அவர்கள் வானத்திலிருந்திறங்குவாரென்னும் நம்பிக்கை இஸ்லாம் மார்க்கத்தின் முக்கியாம்சங்களினின்று முள்ளதல்லவென்று எங்கள் மஸீஹ் (அலை) அவர்

கள் எழுதியிருப்பதாகக் கும்மாளம் போடுகிறீர்கள். எங்கள்; ஈஸா நபி மரணிக்காமலிருக்கிறாரென்றும் இந்தசரீரத்தோடே வானத்திலிருந்திறங்குவாரென்றும் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவர்களின் அந் நம்பிக்கையைப் பிழையென்றும், வர வேண்டிய ஈஸாவும், நாசூலும், நபியும், மஹ்தியும், முஜத்திதும் இமாமும், உம்மத்தியுமானவர், இஸ்லாமிலிருந்தே வரவேண்டு மென்றும், அவர் வந்தாயிட்டாரென்றும், அவர்தான் ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மத் (அலை) அவர்கள் என்றும் உங்களுக்கு ரூபித்துக்காட்ட எங்களால், 24—7—25ல் வெளிப்படுத்தப் பட்ட அறிக்கையின் பிரகாரம் அப்போதும், இப்போதும் ஆயத்தமாபிருக்கின்றோம். ஆகலால் நீங்கள் அதை யொப் பிக்கொண்டு எங்களைப்போல் ஆவலுடன்முன்வந்து வேலையைச் செய்வீர்களென்று நம்புகிறோம்.

சென்ற மாதம் வெளிப்படுத்தப்பட்ட மூஸல்மானில் 6-கேள்விகளை எங்கள் ஜனப் மௌல்வி சாஹிப் அவர்களிடம் வினவியதற்கு, அவர் விடையிறுக்காது வாதம்புரியவந்ததைப் பற்றி சந்தோஷப்படாம லிருக்கமுடியாதென்று வரைந்திருக் கின்றார். அப்படியானால் அதற்கு எவ்வளவோ மாதங்களுக்கு முன்னே ஜனப் மௌல்வி சாஹிப் அவர்களின் ஓர் பிரசித்தமான பிரசங்கம் என்னும் புத்தகத்திலுள்ள, விஷயத்திற்கு விடை கொடுக்குமுடி மூஸல்மான் ஆசிரியரின் நாமத்தையும் காட்டிக் கேட்டதற்கு விடையிறுக்காது வாதம்புரிய கம்பளீக்கு வந்தது நகைப்புக்குரியதல்லாத விஷயமா? அதற்கு விடைகொடுத்தா ரெனச் சொல்வார்களானால் அதைக் காட்டும் பார்ப்போம். முன் கேட்ட கேள்விக்கு விடைகொடுத்த பிறகல்லவோ, எதிர்கேள்வி கேட்கவேண்டும்.

இஸ்லாமார்க்கத்தையும், எங்கள் நபிநாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களையும் குறைகூறி தூஷணித்துக் காலத்தைக் கழித்துவந்த ஆத்தம்பாதிரியாரோடு எங்கள் மஸீஹ் (அலை) அவர்கள் மதப்போர் செய்து சிறுமையடைந்தாரென் றெழுதி யிருக்கின்றீர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் இஸ் லாம் மார்க்கத்தையும் தூஷணித்த ஆத்தம்பாதிரியே சிறுமை யடைந்தாரென்பதை விளங்காமல்பேசுகிறீர்கள். மஸீஹ்(அலை). அவர்கள் ஆத்தம் பாதிரிபைக்குறித்து பொய்யன் மெய்ய

னுடைய முன்னில் அழிந்துபோவானென்று சொன்னதுபோல் அப்பாதிரி, 1896-ம்வருஷம் பெரேஸ்ஸூரில் அழிந்துபோக வில்லையா? மஸீஹ் (அலை) அவர்கள் 1908-ம்வருஷம் உபாத்தானதைக் காணவில்லையா? சொல்லப்பட்டபடி அழிந்து போனதுதானே சிறுமை. (6)-வருஷத்திற்குள் வாளால் கொல்லப்பட்டுபோவானென்று முன்னறிவிக்கப்பட்ட ஆரிய சமாஜிகளின் தலைவனை பண்டித் லேக்ரும், அதே பிரகாரம் அவனை மறைவான வாளால் துண்டுதுண்டாக்கப்பட்டதா சிறுமை.

மஸ்தி அலைஹிஸ்ஸலாம் அவர்களின்

33 புஸ்ல்லாவரோட், கம்பளை. 30-7-25

கிழான ஊழியன்,
A. அப்பாஸ் அஹ்மதி.

இவ்விரண்டாவது அறிக்கையை எ. அப்பாஸ் காதியானி என்பவர் இரைச்சிக்கடை, சி. ஷம்சுத்தீன் அவர்களிடம் கொணர்ந்துகொடுத்து கூறினதாவது:- அஹ்மதியாக்களாகிய நாங்கள் வாதம்புரியக்கூடிய நிபந்தனைகளைக் காட்டியிருக்கிறோம் முஸ்லிம் சங்கத்தார்களாகிய நீங்கள் நிபந்தனைகளைக்காட்டவில்லை. நாங்கள் முஸ்லிம்சங்கத்தாரால் வாதம்புரியக்கூடிய எல்லா நிபந்தனைகளையும், ஏற்றுக்கொள்ளுவோம். எங்கள் நிபந்தனைகளுக்கு நியாயவிரோதமாகக் காணப்பட்டால், என்னுடன் பேசி முடிவுசெய்யுங்களெனக் கூறலானார். அதன்மீது சில வாதங்கள் நடைபெற்றன. இறுதியில் காதியானி அப்பாஸ் கூறினதாவது:- காதியானில் பிறந்த மிர்ஸாகுலாம் அஹ்மது அவர்களை அஹ்மதியாக்களாகிய நாங்கள் நபியென்றும், றசூலென்றும், முஜத்திதென்றும், மஸீஹென்றும், பஷ்தியென்றும் முதலாவதாக யாங்களை எழுத்துமூலமாக எண்ணிப்பீபோம். இதை நடத்திக்கொள்ளவேண்டிய முறைகளை எங்கள் மௌல்வி எ. பி. இ. சமூகம் முடிவுகட்டிக்கொள்ள ஆண்மைத்தனமாக முன்வாருங்கள் என்றார். இதற்கு ஜனப் ஷம்சுத்தீன், கம்பளை டவுண் சங்கத்தினரைக்கலந்து பதிலளிக்கிறேனென வாக்களித்தார். 1925-ஆகஸ்டு 2-ம்தேதி இவ்விஷயத்தை ஆலோசனை புரிய முஸ்லிம் சங்கத்தில் ஸ்பெஷல் மீட்டிங்கு ஒன்று கூட்டப்பட்டது. அதில் முஸ்லிம்களுக்கும், காதியானிகளுக்கும் கடைபெற்றுவரும் விவாதங்களை நோட்டீஸ் மூலமாக வெளிப்படுத்து

வதில் பயன் விளையாது. அப்பால் அஹ்மதி அழைத்தபடி தர்க்கிக்கவேண்டிய முறைகளை ஒழுங்காகவும் யாவரும் அறிந்து கொள்ளும் விதமாக ஞாயமாகவும் பேசித் தீர்மானித்து வருவதற்காக, கனம் ஷம்சுத்தீன், அலாவுத்தீன் ஆகிய இரு மெம்பர்களையும் தெரிந்தெடுக்கப்பட்டது.

ஆகஸ்டுமீ 3-ம்உ காலையில் சமலான் காதியானி என்பவர், பப்ளிக் மார்க்கட்டில் சங்க அங்கத்தினர்களாகிய சி. ஷம்சுத்தீன் கா. அப்துர்ரஹ்மான், S. M. சலீம், அலாவுத்தின், இல்லவத்துரை, முஸ்லிம் கல்வி அபிவிருத்திசங்க சபாநாயகராகிய, மீ. அ. ஜீதருஸ், S. L. மரைக்கார் முதலிய இன்னும் சிலர் முன்பாக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்துவிட்டதாகவும், இனி அவர்கள் வரப்போகிறதில்லையெனவும், யாங்கள் வாதிக்கத் தயாராயிருக்கிறோமென்றும் தெரிவித்தார். அதற்கு கனம் ஷம்சுத்தீன் அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானுலகத்தில் ஜீவித்திருப்பதையும், மரணித்திருப்பதையும் குறித்து வாதிக்கத் தேவையில்லை. நீங்கள் நபியென விஸ்வாசித்திருக்கும் மிர்ஸாகுலாம் அஹ்மது என்பவரை நபியென்றும், றசூல், மஹ்தி, மஸீஹ் என்றும் ரூஜூப்பிக்க உங்களால் கூடுமா வென்க, ஆம். எங்களால் முடியும். எங்கள் மௌல்வியிடம் வாருங்களெனக் கேட்டுக்கொண்டார். அதன்பின், மேற்கூடிய சமலான்காதியானி தமது சகலர். அ. அப்துர்ரஹ்மான், சி. ஷம்சுத்தீன் S. M. சலீம், மீ. ஜீதருஸ் ஆகிய காவல்லரிடமும் ஓர் இரகசியம் கூறப்போவதாக தனித்த ஓரிடத்தில் அழைத்துக் கொண்டுபோய் தாம் கண்ட கனவைச்செப்பி மாலை மாலையாக, அழுதார். அஃதென்னவெனின், நான் காதியானி மதத்தில் சேர்ந்த சில காலைக்குப்பின் ஓர் வெள்ளிக்கிழமை இரவு நித்திரையில் ஓர் மையித்து காபிரீன்களால் கொண்டுபோகக் கண்டேன். இது யாருடையமையித்தென்று கிட்ட நெருங்கிப்பார்க்கும்போது, அது காணுகவேயிருக்கிறேனென்றார். அவரின் அழுகையை ஷம்சுத்தீன் ஒருவாறு அமர்த்தி, இந்த உமது கனவுக்கு நீர் என்ன அர்த்தமமைத்திருக்கிறீரெனக்கேட்க, அவர் நான் காதியானி மதத்தில் சேர்வதற்குமுன் காபிராயிருந்தேன். இப்போது முஸ்லிமாயிருக்கிறேன்; காதியானிமதத்தில்

சேர முன் நான் மரணித்திருந்தால் காபிராக மரணித்து, காபி சாலேயே அடக்கப்பட்டிருப்பேன். இதுவே என் தாத்பரிய மென்றார். அதற்கு கனம் ஷம்சுத்தீன், தங்கள் கனவுக்கு இவ் வர்த்தம் பொருத்தமல்லவே நீர் காதியானி மதத்தில் சேர்ந்து சில காலத்திற்குப் பின் இக் கனவு கண்டிருப்பதால் இதன் நியாயார்த்தம் என்னவெனின், இப்போது நீர் விஸ்வாசித்திருக் கும் மார்க்கம், காபிர்களுடைய மார்க்கமாகவும், இதைவிட்டு நீர் அதிசீக்கிரம் தௌபாச்செய்யாமல் இதிலிருந்தேமரணித்து விடுவீரேல், காபிர்களேக்கொண்டே காபிர்கள் அடக்கப்படும் இடத்தில் அடங்கப்படுவீரென்றும், ஓர் முன்னறிவிப்பு தோற் றப்பட்டிருக்கிறது என்றார். *

முஸ்லிம் சங்கத்தில் தீர்மானித்தபடி அன்று பின்னேரம் இஸ்லாமியப் பிரதிநிதிகளிருவரும் தர்க்கத்திற்கு அழைத்த அப்பாஸ் காதியானியிடம் சென்று நீர் வாக்களித்தபடி மிர்ஸா குலாம் அஹ்மது என்பவரை நபியென ருஜூப்பிப்பதாக எழுத்துத்தாருங்கள் என்று கேட்டார்கள். அதற்கு அப்பாஸ் காதியானி எம் உஸ்தாது, எ. பி. இப்ருஹீம் சாஹிப் போஸ் தான்கான் வீட்டில் அமர்ந்திருக்கிறார்கள். தயவுசெய்து அங்கு போய் அவர்களிடம்பேசி முடிவுசெய்துகொள்ளவேண்டுமென வேண்டிக்கொண்டபோது தூதர்களில் ஒருவரான அலாவுத்தீன் நாங்கள் அவரிடம் வருவது நீதியல்ல நீரும் ரமலானும், தீர்மா னித்து உறுதிமொழி கூறியவண்ணம், கடிதம் வாங்கிவாருங்கள் என்க. ஷம்சுத்தீன் அவர்கள் அப்படியல்ல, அவர்களின் மௌல்வி எப்போர்ப்பட்டவர், அவருடன் சிறிது சம்பாஷணை செய்யவும் எனக்கு விருப்பமிருப்பதால், போகலாம் வாருங்கள் என்றார். அதற்கியைந்து மேடி இரு தூதுவர்களும் அப்பாஸ் காதியானியை அழைத்துக்கொண்டு குறித்த மௌல்வி யிருக் கும் இடத்திற்கு 4-30 மணிக்கு போய்ச்சேர்ந்தனர். மௌல்வி

* இந்தக் காதியானிமதம் காபிர் மதம் எனப்பஹிரங்கமாக கனவு கண்டலும் அதையும் இகழத்தக்க வேற்றருத்தம் செய்துகொள்கின்றனர். மேற்கூறிய அவரது கனவு இவ்விஷயத்தில் தகுந்த அத்தாக்ஷியென்பது அறிஞர் அறிந்த உண்மையே இவ்வாறே மிர்ஸாகுலாம் அஹ்மது நாக வாதியென்று பலர் கனவுகண்டு அம் மதத்தைவிட்டும் தௌபாச்செய் திருக்கின்றனர்.

சாஹிபின் சமீபம் சென்றதும் அப்பால் காதியானி எங்கள் குரு மஹா பெரியார், அவருக்கு சலாம் செய்துகொண்டு உள்ளே செல்லுங்களென்றதற்கு ஷம்சுத்தீன் இவர்களுக்கு சலாம்செய்ய ஹக்குக்கும் இல்லையெனப்பதிலளித்து உள்ளே சென்றார். இவ்வார்த்தை ஷெ மௌல்விசாஹிபின் செவியில் விழவும், அவர் எழுந்து கைகுலுக்கி உட்காரும்படிக்கூறினர். உட்கார்ந்தபின் இரு தூதுவர்களில் ஒருவரான கனம் ஷம்சுத்தீனுக்கும், காதியானி மௌல்வி எ. பி. இப்ரஹீம் சாஹிபுக்கும் (5) நாட்களாக நீண்ட சம்பாஷணை நடைபெற்றது. அவை அதிக விரிவாய் எழுதப்பெற்றிருக்கிறபடியால் அவற்றில் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கியாம்சங்களைச் சுறுக்கமாய்த் தருகிறேன்.

மௌல்வி:— நீங்களிருவரும் வந்தகாரணம் யாது?

சி. ஷம்சுத்தீன்:— நாங்கள் ஆலிமானதால் நான் பேசும் வார்த்தைகளில் தவறுகள் ஏற்படின் மன்னிக்கக்கோறுகிறேன். கம்பனியில் பரம்பரையாக நாங்களும்; தற்சமயம் காதியானி மதத்தில் சேர்ந்திருக்கும் அப்பாஸ், ரமலான், போஸ்தான்கான் ஆகிய மூவரும் குடும்பஸ்தர்களாக இவ்வூரில் வசித்துவந்ததுமன்றி நாங்கள் அவர்களின் ஒவ்வொரு சுபாதுகூலங்களிலும் கலந்து ஏகமனதாய் பரஸ்பர சிநேகிதத்துடன் வாழ்ந்துவந்தோம். இப்போது சிலகாலமாக மேற்கூறிய மூவரும் புதிய கொள்கையாகிய காதியானி மதத்தில் சேர்ந்ததி நிமித்தம் எங்களுக்குள் பிரிவினை ஏற்பட்டதுமன்றி, பின் சந்ததிகளையும் தொடர்ந்து நிற்கிறது. ஆகவே இக் காதியானிமதத்திற்கு தாங்கள் இவ்விலங்கைத்தீவில் போதகரும், மௌல்வியும், இமாமாயும் இருக்கின்றீர்கள். தங்களுடையவும், எங்களுடையவும், கொள்கைகளின் உண்மையை விளங்கியறிவதற்காக தென்காசி, கனம் முஸ்லிம் ஆசிரியர் மீ. இ முஹம்மது அப்துல்காதிர் சாஹிப் அவர்களே முஸ்லிம் சங்கத்தாரால், அழைக்கப்பட்டிருப்பதும் தாங்களறிவீர்கள். அவர்கள் மிர்ஸாகுலாம் அஹ்மது ஓர் நபியுமல்ல, தரூலுமல்ல, முஜத்திது, மஹ்தி; மஸீஹுமல்ல, அவர் ஓர் பொய்யர் என்பதாகப் பிரசங்கம் புரிவதும், தங்களுக்கு நன்குதெரியும்; அதற்காகவே தாங்களும் இங்கு

விஜயஞ்செய்திருக்கிறீர்கள். ஆயினும் நாங்கள் முன்வந்து நேர் நேராகப்பேசிமுடிவெடுக்காமல் நோட்டீஸ்மூலம் நாள் கடத்திக் கொண்டிருப்பது உசிதமல்லவெனக் கருதி தங்களிருவரையும் நேர்நேராகவைத்து விவாதிக்கச்செய்து உண்மையை வெளிப் படுத்தவேண்டுமென்பதுதான் எங்களது நோக்கம். அதற் காகவே இங்கு வரலானோம்.

மௌல்வி:- முதலாவதாக ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிரோடிருக்கிறார்களா? அல்லது மரணித்துவிட்டார்களா? என்ற விஷயத்தை முடித்துக்கொண்டு அப்பால் அடுத்தவிஷய தைப் பேசலாம்.

ஷம்:- ஈஸா (அலை) அவர்களின் மவுத்து ஏயாத்தைப்பற்றி தர்க்கிக்க எங்களுக்குத் தேவையில்லை. நீங்கள் விஸ்வாசித்திருக் கிற மிர்ஸாகுலாம் அஹ்மது என்பவரை நபியென ருஜூப்பிக்க வேண்டும்; இதுதான் எங்களுக்குத்தேவை.

மௌல்வி:- அது இரண்டாவதாகப் பேசவேண்டும், எதைப் பேச்சுக்கும் முதலில் ஓர் காரணம் வேண்டும். இவ்வூரிலுள்ள ஓர் பெரியவர் கொழும்புக்குப்போனவிடத்தில் மரித்துவிட்டார் உண்மையறியாத நீங்கள் அவர் வருவாரென வழிபார்க்கிறீர்கள் உண்மையையறிந்த யாங்கள் அவர் வரப்போகிறதில்லை யென்கி றோம்.

ஷம்:- தங்களது உதாரணப்படி இந்த போஸ்தான்கான் கொழும்புக்குப் போனவிடத்தில் மரணித்தாரென வைத்துக் கொள்வோம் உண்மையறியாத நாங்கள் அவர் வருவாரென வழிபார்க்கிறோம். உண்மையறிந்த நீங்கள் அவர் இறந்ததாக அவர் கபுரைக்காட்டலாம் அவரது அன்னை சம்சாரம் பிள்ளை களைக்கொண்டு இலேசாக எண்ணிக்கலாமே. சென்ற வருஷம் ஹஜ்ஜுக்குப்போன ஜெய்னுத்தீன் முதலியவர்கள் அவடத்தில் மவுத்தான இரண்டாம் நாள் இவ்விலங்கையில் எல்லோருக்கும் தெரிந்துவிட்டதே இந்தக் கொழும்பில் மவுத்தானவர்களுடைய செய்தி எங்களுக்குத் தெரியாமலாயிருக்கும்?

மௌ:- அதுதான் ஈஸா (அலை) அவர்களின் வரவை எதிர் பார்க்கிறீர்கள் அதைத்தான் முதல் தீர்மானிக்கவேண்டும்.

ஷம்:- எங்களது 25-7-55 நோட்டீஸில் காட்டியபடி தங்களுடைய நபியாகிய மிர்ஸாகுலாம் அஹ்மது என்பவர் இஸ்லாமுதற்பாகம் (60)ம் பக்கத்தில் ஈஸா(அலை) அவர்களின் விஷயமாக வாதிக்கிறது ஈமானிலுள்ளதல்ல, அவசியமுமல்ல, என்று கூறியிருக்கிறார். ஆனதால் அதை இரண்டாவதாக வைத்துக் கொண்டு நான் நபி என்னை நம்பாதோர் காபிர் என்ற அவர் கூற்றுப்படி அவர் நபிதானுவென்பதை ருஜூப்படுத்துவது தான் தங்களது முதற்கடமை.

மௌ:- அப்படியானால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப்பற்றிய வாதம் உங்களுக்குத் தேவையில்லை யென்பதற்கு கடிதம் தரவேண்டும்.

ஷம்:- தேவையில்லை என்று கூறமாட்டோம் தேவைப்படும் சமயம் பேசுவோம் தங்களது சிஷ்யர்களாகிய அப்பாஸ் ரமலான் காதியானிகள் எங்களிடம் வாக்குறுதிகூறினபடி தங்கள் நபியை நபியென ரூபிக்கவேண்டியதுதான் எங்களுக்குத் தேவை.

மௌ:- முகத்தைச் சினந்தவராக அப்பாஸ், நீங்கள் அப்படி பொருந்தினீர்களா (அப்பாஸ்) ஆம் ஹபிப், நமது நபியை ருஜூப்பிக்கிறது நமது கடமைதானே?

மௌ:- அப்படியானால் சரி நாளை பேசிக்கொள்வோம் இன்ஷா அல்லாஹ்.

இரண்டாம் நாள் நடபடிக்கை.

இரண்டாம் நாள் அப்பாஸ் காதியானியையும் அழைத்துக் கொண்டு இஸ்லாமிய தூதரிருவரும் போஸ்தான்கான் விட்டிற் சென்று மௌல்வி சாஹிபை சந்தித்தார்கள்.

ஷம்:- நாம் நேற்று பேசிக்கொண்டபடி தங்களது நபியை நபியென ஸ்தாபிக்கலாமா?

எ. பி:- ஆம் ருஜூப்பிப்போம் ஈஸா(அலை) அவர்களைப்பற்றி நீங்களொன்றும் பேசக்கூடாது.

ஷம்:- சரி, நல்லது போஸ்தான்காதியானி ஈஸா (அலை) அவர்களின் விஷயத்தைப் பேசாபல் முடிவெடுக்கமுடியாது என்றார்.

ஷம்:- உங்கள் நபியை நபியென ஸ்தாபிக்கவேண்டும் இதுவே எம் வாதம் ஈஸா (அலை) அவர்களைப்பற்றி பேசவேண்டியது வருமென்று ஜோசியம்கூறுகிறது உமதுவிளாயத்தின் பேரிலா?

போ:- நாம் பேசிக்கொள்கிறதில் ஈசா (அலை) அவர்கள் விஷயத்தைப்பற்றி பேசிக்கொள்வதில்லை யென எழுதிக்கொள்ள வேண்டும்.

அலாவுத்தீன்:- நல்லது அப்படியே செய்வோம்.

மௌ:- போஸ்தான்காரை விளித்து மை, பேனு தயார்செய்யுங்களென்றார் அப்படியே தயார்செய்து போஸ்தான்காரன் எழுதத்தொடங்கிவிட்டார்.

மௌ:- இன்று நான் தவறுதலாக குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தேன் அதுமுதல் இதுவரை தினேகம் குளிர்ந்திருக்கிறதுமன்றி கொஞ்சநேரம் சம்பாஷணை செய்ததினால் வியர்த்துவிட்டது இச்சமயம் எழுத்தை கவனித்தால் சரீரத்திற்கு கஷ்டம் ஏற்படும் ஆதலின் தயவுசெய்து நாளை வந்தால் நலம்.

ஷம்:- சரியென்று வந்துவிட்டார்கள்.

மூன்றாம் நாள் மழை அதிகமானதினால் போகக்கூடவில்லை.

மூன்றாம் நாள் நடபடிக்கை ஆகஸ்டுமீ 6உ

இஸ்லாமியத் தூதுவரிருவரும் அப்பாஸ் காரியானியையும் அழைத்துக்கொண்டு காரியானிமௌல்வியிடம் தாங்கள் கூறினபடி கடிதம் தரலாமாவென்று கேட்க அவர் இதோ எழுதிவைத்திருக்கிறேனென்று காப்பியைக்கொடுத்தார் பின்பு அவர்கூறினதாவது, கொழும்பில் என்னை தர்க்கத்திற்கு அழைத்தார்கள். நான் வரமாட்டேனென்று கூறிவிட்டேன், அன்றியும் நாயகம் (ஸல்) ஒருவரோடு தர்க்கமாடி பேசினவர்களல்ல, நாங்களும் எங்களுடைய ஹஸரத் மிர்ஸாகுலாம் அஹ்மத் அவர்களும் அப்படியே ஒருவருடன் வாதாடப் பிரியப் பட்டவர்களல்ல வென்றார். (*)

ஷம்:- எந்தப் பேச்சுக்கும் எங்கள் நாயகம் அவர்களுடைய பதவியைப்போல் உங்களுடைய மிர்ஸாகுலாம் அஹ்மதைப்பேசி

(*) பொய்யோ அறியாமையோ!

வருகிறீர்களேயென்க அதற்கவர் ஆம், அதற்கு மேலான பதவியில் உள்ளவர்கள்தான் சென்றார் (ரஹ்தபில்லாஹ்)

பின்னர் காதியானி மௌல்வி பட்டரில் எழுதிவைக்கப்பட்ட கடிதத்தை வாசிக்கப்பட்டது அதில் மறுபடியும் ஈஸா (அலை) அவர்களின் வாதத்தைக் கிளப்பக்கூடிய விதமாக யெழுதப்பட்டிருந்தது; இதைப் பார்த்துவிட்டு எங்கள் சங்கத்தில் கலந்து வருகிறோமென்றார்கள்.

நான்காம் நாள் நடபடிக்கை.

ஆகஸ்டுமீ 9உ மாலை 3 மணிக்கு தூதர்கள் அப்பால் காதியானியையும் அழைத்துக்கொண்டு போல்தான்கான் வீட்டுக்குச்சென்றார்கள், காதியானிமௌல்வி இவர்களை நோக்கி என்ன சரிபார்த்தீர்களா வெனக்கேட்டார். அதற்கு இருவரும் மௌல்வி சாஹிபின் சமர்த்தை யறிந்துகொண்டு மௌல்வி சாஹிப் தாங்கள் ஒப்புக்கொண்டதற்கு மாறாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப்பற்றிய வாதத்தைக் கிளப்புவிதமாக அமைத்திருக்கிறீர்கள் இது தாங்கள் ஒப்புக்கொண்டதற்கு மாற்றமாதலால் எங்களுக்கு இதில் பேசவேண்டியது தற்சமயம் அவசியமல்ல. தாங்கள் விரும்பும் பக்ஷம் முதலாவது தங்கள் நபியின் யோக்கியதையைத் தெரிந்துகொண்டு அப்பால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் விஷயத்தை எடுத்துக்கொள்வோம்; எனவே, இக்கடிதம் நமது தீர்மானத்திற்கு மாற்றமானதால் இதுசரியல்ல வென்க பின்னர் தூதர்களுக்கும் மௌல்விக்கும் ஈஸ்புமரியம் விஷயமாக சில வாதம் நடந்தது.

ஷம்:- தங்களது நபியாகிய மிர்ஸா சாஹிபை எங்களது பரிசுத்த ஸ்தலமாகிய மக்காவும், மதினாவும் நபியென ஏற்றுக்கொண்டதாவென்க மௌல்வி ஆம் ஷரீப்ஹு ஸைன் ஒப்புக்கொண்டாரென்றார்,(*)

ஷம்:- ஷரீப் ஓர்கவர்னர் அவரைப்பற்றி காரியமில்லை நான்கு மதுஹபையும் அதன் இமாம்களையும் தாங்களும் ஒப்புக்கொள்கிறீர்: ஆதலின் அந்நால்வரும் ஒப்புக்கொண்டார்களா வென்க

(*) ஆதாரங்காட்டட்டும்.

மௌல்வி:- ஷரீபின் சொல்லை நான்கிமாம்களும் கேட்கவேண்டியவர்கள்தானே என்றார்.

ஷம்:- எனது கேள்விக்கு விடையில்லை இராஜாங்க விஷயத்தில் கவர்னரின் உத்தரவை எல்லோரும் கேட்கத்தானே செய்வார்கள் தங்களுடைய நபியை நாலிமாம்களும் ஒப்புக்கொண்டார்களா வென்பதுதான் கேள்வி, அப்படி ஒப்புக்கொண்டதாக பத்வா வரவழைத்துத் தந்தால் "மூஸல்மான்" ஆசிரியரோடு தாங்கள் வாதாடத் தேவையில்லை நாங்களெல்லாம் தங்களோடு சேர்ந்துகொள்கிறோம்.

சமயத்திற்குத் தக்கவாறு நழுவிக்கொண்டுபோவது அவர்களின் வழக்கமென்பதை இதன்மூலம் அறியலாம்.

மௌல்வி:- இந்தியாவில் முஹம்மதலி ஷௌக்கத்தலியின் மூத்த தமையனரும் காதியானி, அவரின் தாயாரும் காதியானிதான். ஆயினும் பைஅத்து வாங்கவில்லை. *

ஷம்:- நான் கேட்கும் கேள்விகளை விட்டுவிட்டு வேறுவிதமாக பேசுகிறீர்களே, இந்த நாலைந்து நாட்களாக இப்படியே தந்திசவார்த்தைகளால் பேசினது உண்மைக்கு மாற்றமாகும் தாங்கள் ஒரு புது மார்க்கத்தை உற்பத்திசெய்து சகோதரர்களாயிருந்த எங்களைப் பிரித்து விட்டு நாளை நீங்கள் போய்விடுவீர்கள் சதாவும் நாங்கள் பகைத்துக்கொண்டிருக்க நேரிடும். தொட்டதிற் கெல்லாம் ஈஸா (அலை) அவர்கள் மரணத்தைப் பேசவேண்டுமென்கிறீர்கள் உங்கள் கொள்கைப்படி உங்கள் மிர்ஸாவை நபி மஹ்தி மஸீஹ் என்பதை எண்பிப்பதிருக்கட்டும், அவரைச் சாமான்யமான ஒரு முஸ்லிம் என்றுவது ருஜுப்பிப்பீர்களா? அப்படியானால் சுழிவான பேச்சுகளைப் பேசாமல் சுத்தமாக எழுதிக்கொடுங்கள், அதற்கு அவர் எங்கள் மிர்ஸாநபியை ஒரு சாதாரண முஸ்லிமும் இல்லையென்று நினைக்கிறீர்களென்க. தூதர் முஸ்லிமல்ல அவரை ஒரு காபிர் என்றே நினைக்கிறோமென்றார் உடனே மௌல்வி சினந்தவராக சரி எழுதுங்களென்றார்.

---

* இவர்கள் பொய் சொல்லுவார்களாதலால் இவர்கள் சொல்லியதை நன்றாய் கவனித்துக்கொள்ளாமல் எந்த விஷயத்தையும் கம்பலாகாது.

எழுத்தின் சாரம் நாங்கள் ஈஸா (அலை) மரணித்துப்போ னார்களென்றும் அதற்கு பதிலாக மிர்ஸா சாஹிபுதான் ஈஸாவா கவும், நபி, ரசூல், மஹ்தியாகவும் வரவேண்டு மென்றும் குர் ஆனைக் கொண்டும் அதற்கிணங்கிய ஹதீதைக்கொண்டு ரூபிப் போம் இதை மறுப்பவர்கள் எங்களைப்போலவே ஆதாரங்களைக் கொண்டு மறுக்கவேண்டும். இதை முதல் பேசுகிறவர் 1 மணி நேரமும் மறுக்கிறவர் 1 மணிநேரமும் அப்பால் முறையே அரை மணிநேரம் பேசிமுடிக்கவேண்டும் அக்கிராசனர் சபை யைமட்டும் ஒழுங்குப்படுத்தவேண்டும் ஞாயிற்றுக்கிழமை நட த்தவேண்டும் அரசாங்கத்தின் உத்திரவு வேண்டுமென்பதாம்.

இதிலும் ஈஸா (அலை) அவர்கள் மரணத்தைப்பற்றித்தான் பேசவேண்டுமென்று கூறுகிறார்கள் அது சரியல்ல நீங்களும் உங்களது நபியை குர்ஆன் ஹதீதைக்கொண்டு ரூபிப்பீர்கள்; மூஸல்மான் ஆசிரியரும் குர்ஆன் ஹதீதைக்கொண்டு அவர் நபி யல்ல வென ரூபிப்பார்கள், அப்படியானால் இருவரின் தர்க்கத் தையும் சரிபார்த்து தீர்ப்புச்செய்வது யார் என்க, அவர் தீர்ப்புச் செய்ய ஆள் தேவையில்லை யென்றார்.

ஷம்:- நீங்களிருவரும் குர்ஆன் ஹதீதைக்கொண்டு ரூபிக் கிறீர்கள், அரபு பாஷை அறியாத நாங்கள் யார் சொல்வது மெய்யென நம்புவோம். பிரசங்கம் செய்துவிட்டுப் போய்விட் டால் பார்க்க வந்தவர்கள் வாயைப்பிழந்துகொண்டு இருந்து விட்டுப் போகவேண்டியதுதான். உங்கள் சார்பினர் தங்களுக்கு சாதகமென்றும் எங்கள் சார்பினர் எங்களுக்கு சாதகமென்றும் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதுதான் ஏற்படும். கடைசி கிடைக்கிற பலன் இதுதான். அப்படியானால் எங்கள் ஆசிரியர் தினசரி பிரசங்கம் செய்துகொண்டு தானிருக்கிறார்கள். ஒரு பிறமதஸ்தர் வந்து உங்களுடைய நபி பொய்யனென்று கூறினால் எங்களுக்கு என்ன ஆவேசமுண்டாகும், பின்வாங்காமல்உடனே ருஜுப்படுத்துங்கள் என முன்னிலையில்வந்து நிற்கமாட்டோமா அப்படியிருக்க மூஸல்மான் ஆசிரியர் தங்களுடைய நபி பொய் யென்று (20) நாட்களாக போதித்துக்கொண்டிருப்பதும் தங் களுக்கு ஏன் உண்மையை உணர உணர்ச்சி வரவில்லை. கவர் மெண்டு பந்தோபஸ்தும் ரீ. எம். ஸ்கூலில் வாங்கித்தருகிறோம் ஆயத்தமா?

மௌல்வி:—இப்படியான பொது இடம்தான் தேவை.

தூதர்:- சொலிஸ்டர் ஜெனரல் அக்பர்துரை, கனம் மாக்கான் மரைக்கார், கனம் ஜாயா இவர்களே அக்கிராசனராக வைக்கலா மல்வவா?

மௌல்வி:- இவர்களெல்லாம் எனக்கு பிரியமில்லை.

ஷம்:- பின்னர் தங்களுக்கிஷ்டமான ஒருவரை நியமியுங்கள்.

மௌல்வி:- அக்கிராசனர் நியமிக்க எனக்கு இஷ்டமில்லை. நான் எழுதிக்கொடுத்ததைப்பார்த்து நாளைவந்து சொல்லுங்கள் சரி போய்வருகிறோம்.

ஐந்தாம் நாள்.

1925 ஆகஸ்டுமீ 8வ காலை 10 மணிக்கு இருதூதரும் மௌல்விசாஹிபின் வாசஸ்தலத்திற்கேகும் போது கனம் S L. மரைக்கார், அ. பி. மூசைதீன்பிச்சை ஆகிய இருவரும் கூடச் சேர்ந்து நால்வரும் அப்பாஸ் காதியானியையும் அழைத்துக் கொண்டு ஐவருமாகப் போனர்கள்.

அலாவுத்தீன்:— தங்களுடைய எழுத்துப்படி சரிதான் ஆயி னும் எழுத்துமூலமாகவே பேசவேண்டும்.

மௌல்வி:— நாங்கள் எழுதிக் கொண்டுவந்து வாசித்துவிடு கிறோம்.

ஷம்:- அது சரியல்ல, இருவர் மதத்திலும் சேராத ஒருவரை மத்தியஸ்தராகத் தீர்மானித்து நீங்கள் உங்கள் குருவை நபி யென எண்பித்த கடிதத்தை மத்தியஸ்தரிடம் கொடுக்கவேண் டும் அவர் அதை எங்கள் ஆசிரியர்வசம் கொடுக்கவேண்டும் அவர் நபியல்ல பொய்யரென்பதை ருஜுப்பிப்பது உங்களது ஆதாரங்களையும் மறுத்த கடிதத்தை மத்தியஸ்தரிடம் கொடுக் கவேண்டும் அப்பால் ஒரு விடுத்தம் இப்படியே செய்து அப் பால் இருவகுப்பு உலமாக்களுக்கும் இதையனுப்பி தீர்மானம் கேட்போம் என்றனர். அதற்கு மௌல்வி முடியாதென்றனர். பின்னர் தூதுவர் பலநியாயங்களே எடுத்துப்புகட்டி இறுதியில் உங்களது நபி உண்மையான நபியானால் நீங்கள் இவ்வளவு தய ங்க வேண்டியதில்லை என்றார்கள்.

மௌல்வி:- நான் ஆயத்தமில்லை யென்று கூறிவிட்டு "முஸ்லிம் மான்" பத்திரிகையில் இன்னவிஷயம் தவறாக எழுதியிருக்கிறதென்று ஒழுங்கினமாகக் கூறினர் அதற்கு தூதுவர் இவ்வளவு விஷயத்தையும் விளங்கத் தெரியாதவராயிருக்கிறீரென்று அதன் கருத்தை விளக்கிக்காட்டி எங்கள் உலமாக்களை வருத்தினால் நாங்கள் தர்க்கித்து உண்மையைக் காட்டுகிறோமென்று கூறிவிட்டு சமயம் நேரும்போது குப்புறஅடித்துப் படுத்துக் கொண்டீர்களே. உங்களைத்தூக்கிச் சுமக்க எங்களால் முடியாது. இதுதானா உங்கள் ஆண்மைத்தனம்; என்று கூறிவிட்டு வந்து விட்டார்கள். பின்னர் இந்த ஐந்தாவது நாள் நடபடிக்கைவரை எழுதி முஸ்லிம் சங்கத்தில்வந்து வாசித்தார்கள், உடனே எல்லோரும் ஏகோபித்து இவர்கள் பொய்க்கும் புரட்டுக்கும் அஞ்சினவர்களல்ல, நபியைப்போல உம்மத்து முருக்கிறார்களென்று கூறிவிட்டு இன்னவர்களின் இக்கபடங்களை இலங்கை முழுதும் பகிரங்கப்படுத்த சபைகூடி உலமாக்களைத் தருவித்து முடிவெடுக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள் இதின்மீதுகீழ்கண்ட நோட்டீஸ் வெளிப்படுத்தப்பெற்றது.

கம்பளை டவுண் முஸ்லிம் சங்க விளம்பரம்.

ஈமதன்பார்ந்த முஸ்லிம் சகோதரர்காள்! இத்தால் சகல இக்வான்களுக்கும் அறிவிப்பது யாதெனில் சகல வளமும் பொருந்திய கொளும்புமாநகரால் தூதன் வெளியாகி இலங்கை முழுதும் பாவ ஆரம்பித்ததும் இஸ்லாமார்க்க ஞானமே இல்லாத சில பேதையர்கள் காதியானி வழியை அநுஷ்டித்துக் கொண்டதுபோல் இக்கம்பளை நகரின்கண், மார்க்கப் பக்தியிலும் தேச அபிமானத்திலும் ராஜவிஸ்வாசத்திலும் ஐக்கியப்பட்டு சிறப்பாக வாழ்ந்துவந்த முஸ்லிம்களில் தின்மார்க்க விளப்பமில்லாத சிலர் மேற்படி தூதனின் வலைக்குட் சிக்கி காதியானி நோய்வாய்ப்பட்டார்கள். இவர்களில் (5) ஆசாமிகள் பகிரங்கமாக வெளிவந்துளர். இந்நோய் மறைமுகமாயிருந்த மற்றவர்களுள் முற்றுவண்ணம் நாம் முன்ஜாக்கிறதையாக சகல பிரயத்தனங்கள்செய்து தடுத்துவந்தும் நம்மில் சில தனவந்தர்களுக்கு வந்த காதியானி கடிதங்களைக் கொண்டும் பிரசுரங்களைக்கொண்டும் காதியானிக் கோட்பாடுகளை சரித்திரபூர்வமாய் அறிந்த ஓர்

ஆலிம்சாஹிபை வரவழைத்து வாதம்புரிந்து காதியானிகளின் சந்தேகங்களை யேன் நிவர்த்தி செய்யக்கூடாதென்ற பிரச்னைக் கிளப்பியது. இதைச்சரிகண்ட கம்மிட்டியார் தென்காசி ஜனுப் மௌல்மான் ஆசிரியர் அவர்களை வரவழைத்து இதுவரை ஒரு மாதத்துக்குமேல் உபந்நியாசங்கள் செய்வித்து வருகிற விஷயம் சகலரும் நன்கறிவார்கள். இவ்வுபதேசங்களால் காதியானிமத இரகசியம் வெகுபேர்களுக்குத் தெரிந்துகொண்டது போல் மறைமுகமாய் காதியானிபுறம் சாய்ந்தவர்களுட உணர்ந்து நேர்வழி நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். இம்மாதிரியாகவே பஹிரங்கமாயிருக்கும் காதியானிகளும் திரும்ப போதுமென நம்பி வாதத்துக்கு ஓர் ஆலிம்சாஹிபை வரவழைக்கச் சொன்ன நீங்கள் முன்வராது பின் நிற்பதேன்? நேர்முகமாகவந்து வாதம் புரிந்து நேர்வழி பெருங்களென நாம் நோட்டீஸ்கள்மூலியமாய் அவர்களை அழைத்ததற்கு அவர்கள் வழமைபோல் தாறுமாறாக பதில் நோட்டீஸ்கள்போட்டு வீண்காலம் போக்குவதை யறிந்து நம் கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட இரண்டு தூதுவர்களை யனுப்பி வாதத்துக்கான ஏற்பாடுகள் செய்துவரச்சொன்னோம். தூதுவர்களுக்கு சாக்குப் போக்குச்சொல்லி ஐந்து முறை அலையவைத்து கடைசியாக ஆபத்தம் இல்லையென காதியானி மௌல்வி எ. பி. இப்ரூஹீம் சாஹிபே சொல்லியனுப்பிவிட்டு அடுத்தாற்போல் நாங்கள் தர்க்கத்திற்கு தயார் எதிர் கட்சியினரே சாக்குப்போக்குச்சொல்லி பின்வாங்கிவிட்டனரென காதியானிகளின் மற்றோர் நோட்டீஸ் வெளிவந்தது. இதைக் கண்ணுற்ற ஜனங்கள் மிக பரபரப்படைந்து காதியானிகளின் வழமைக் குபாடங்களுக்கு ஈடுபட்டு நாமும் பிரதி நோட்டீஸ்கள் பிரசுரிப்பதால் பயன் ஒன்றுமில்லை. இதற்கு ஓர் முடிவு செய்ய வேண்டுமென நாடியதால் 16—8—25ல் ஸ்பெஷல் கமிட்டி ஒன்றுகூடி தீர்மானம் செய்துகொண்டபடி கம்பளையில் இலங்கை முஸ்லிம்களின் பொதுச்சபை ஒன்று அடுத்த செப்டம்பர் மாதம் 13வ ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்கு கம்பளை கோர்ட்டுக்கு எதிரிலுள்ள C. M. S. ஸ்கூல் மைதானத்தில் கூட்டி அதில் காதியானிமத உண்மையைப் பற்றியும் மற்றும் பலவேறு விஷயங்களைப் பற்றியும் உபந்நியாசங்கள் செய்யப் பட்டு அதன் பயனாக முடிவடையவிருக்கும் வடஇந்தியா டூர

மார்களால் காதியானிகள் விஷயமாக கொடுபட்ட பத்வா வை இலங்கைவாசிகளாகிய நாமும் ஏற்றுக் கொண்டோம்; யென்ற தீர்மானத்தையும் இனி மதப் பிரசாரம் முதலியவைக ளுக்காக ஆகவேண்டிய தீர்மானங்களையும் செய்யப் போவதால் அவைகளை ஆலோசித்து ஆதரவளிப்பதற்காக இந்த நோட் டீஸைப் பார்க்கும் மகா மேதாவிகளான உலமாக்களும் கண்ணி யம் பொருந்திய முஸ்லிம் உத்தியோகஸ்தர்களும் மேன்மை யான படித்த வகுப்பார்களும் சிறப்பு வாய்ந்த கனதனவான்க ளாகிய இக்வான்களும் இம்மகாசபைக்கு நேரத்தோடு சமுகங் கொடுத்து தங்களாலான பணியைச் செய்து சபையை அலங்க ரிப்பீர்கள் யென எதிர்பார்க்கிறோம்.

மேற்சொன்ன காதியானி நண்பர்கள் அன்றுவது மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிபை உண்மையான நபியென வாதிக்க முன்வரும் பட்சம் அதற்கும் அச்சபையில் இடங்கொடுக்கப் படும்.

கம்பளை
21-8-25

உமர் பாட்சா,
கம்பளைவாழ் முஸ்லிம் சங்கம்.

கம்பளையில் இலங்கை முஸ்லிம் மகாசபை.

21-8-25 கம்பளை வாழ் முஸ்லிம் சங்கத்தாரின் விளம் பரப்படி நாளதுமீ 13உ ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்கு கம்பளை கோர்ட்டுக்கு எதிரிலுள்ள மைதானத்தில் மகாநாடு கூடியது. இலங்கையில் நானுபுறங்களினின்றும் ஏறக்குறைய ஐயாயிரம் முஸ்லிம்கள் பாரவான்களாகிய உலமாக்கள் கல்வி மான்கள் சகிதம் இம்மகாசபைக்கு விஜயஞ் செய்திருந்தனர். பிறமத கனவான்களும் மகாநாட்டைச் சுற்றிலும் தோற்றலாயி னர். சபை மிகஅமரிக்கையுடன் ஒழுங்காய் நடந்தது. கனம் Hon S. R. முஹம்மது சுல்தான் மரைக்கார் அவர்கள் அக் கிராசனம் வகித்தார்கள். கனம் ம. செ. செய்யித் முஹம்மது மரைக்கார் அவர்கள் உபசபாநாயகர் கமிட்டி தலைவர் ஹோதாவில் சபையை வரவேற்றார். கனம் A. S. அப்துல் கப்பார் சாஹிப் அவர்களால் கிராஅத் ஓதப்பட்டு சபை திடங்கியது. மகா மேன்மை வாய்ந்த ஜனப் முஹம்மது சுலைமான் ஆலிம்சாஹிபு வெகு அழகாகவும் ஜனங்கள் மனதில் பதியுமாறும் ஹதீது

தலில்களுடன் உபந்நியாசம் செய்தார்கள். பிறகு முதல் தீர்மானம் தனம் முஹம்மத் றியால் அவர்களால் பிரசேபிக்கப்பட்டது. அதாவது:-

நம் தீனுல் இஸ்லாத்தின் ஞானம் நாளடைவில் முஸ்லிம் சமூகத்தாருள் குன்றிவருவதை தடுத்து அவர்களை தற்காத்து மார்க்கக் கல்வியைப் புகட்டி அதன்படி நடக்கச்செய்பவும்; நம் மார்க்கக் கோட்பாடுகளைக் கெடுத்து வழிகேட்டில் ஜனங்களை இழுக்கத் துணிந்திருக்கும் காதியானிகளைப் போலோற்ற மார்க்கவிரோதிகளின் தந்திரியைகளை நிராகரித்து நேர்வழிக்குக் கொண்டுவரவும்; இம்மாதிரியான ஓர் மகாசபை இலங்கையில் நம் முஸ்லிம் சகோதர பிரபுக்களால் பரிபாலிக்கப்பட்டு வர வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

என்னும் தீர்மானத்தை பிரசேபித்தவர்களாக இங்கிலீஷில் வெகு நேரம் சரித்திர ஆதாரங்களுடன் பேசினர்கள்.* இதை மகாகனம் ஜனப் மௌல்வி T. M ஹனீப்ஆலிம் சாஹிப்அவர்கள் ஆமோதித்து ஹதீஸ் தலீல்களுடன் இதின் முக்கியத்தை எடுத்துரைத்தார். பிறகு இரண்டாவது தீர்மானம் மகாகனம் ஜனப் "மூஸல்மான்" ஆசிரியாவர்களால் பிரசேபிக்கப்படுங்கால் மிர்ஸாகுலாம் அஹ்மத்சாஹிபின் சரித்திரச்சுருக்கத்தையும், இன்னும் நான் ஹிந்துக்களுக்கு கிருஷ்ணனென்றும், ஆரியர்களுக்கு அசுசனென்றும், கிறிஸ்தவர்களுக்கு ஏசு என்றும், சுன்னத்வல் ஜமாஅத் முஸ்லிம்களுக்கு வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ் மஹ்தி என்றும், இதேஞடி ஷியாக்களுக்கு உயிருள்ள அலி. ஹுஸைன் என்றும் வாதம் புரிந்ததுடன் என்னை நம்புவதற்கு எனது முன்னறிக்கைகளே போதிய சான்றாகும் ஆதலின் அவைகள் நிறைவேறியுல் நான் மெய்யன் அ றேல் சபிக்கப்பட்ட பொய்யன், என்று கூறினதையும் அப்பால் அவரின் பொய்யான இல்ஹாம்களில் ஒன்று ஆக்தம் பாதிரியாரின் மானத்தைக்குறித்திருந்ததையும் அதனுல் மிர்ஸா சாஹிப் சிறுமைப்பட்டதையும் தெளிவாகவும் சுருக்கமாகவும்

* இவற்றை தமிழில் ஜனப் அப்துர் ரஹீம் சாஹிபு மொழி பெயர்த்துப் பொது ஜனங்களுக்குக் கூறினர்.

கூறிவிட்டு மிர்ஸா சாஹிபின் புஸ்தகங்களினின்றும் அவரின் விஸ்வாசங்களான கீழ்காணும் வசனங்களைப் படித்துக் காண்பிக்கப்பட்டது.

(1) நாம் ரசூலும் நபியாகவுமிருக்கிறோம், இதுவே எம் தாவா, (பதர் 5 மார்ச்சு 1908)

(2) நான் ஷரீஅத்துடைய நபியாக யிருக்கிறேன்,
(அர்பயீன் 4 ப. 7)

(3) நாயகம் அவர்களின் அற்புதம் மூவாயிரம் எனது அற்புதங்களோ மூன்று லக்ஷம்
(மகுதூபாதே அஹமதிய்யா கிர். 4வா. 3. ப. 49)

(4) நாயகத்துக்கு சந்திரன் கிரஹணமானது எனக்கு சந்திரன், சூரியன் இரண்டும் கிரஹணமாயின
(கஜிதா அஃஜாலியா 71-ம் ப.)

(5) நாயகம் அவர்களின் வஹீகளில் அர்த்தம் விளங்காது (நாயகம் அவர்களுக்கு) தவறுதல்களேற்பட்டுவிட்டன
(இஸாலா 1182-ம் ப.)

(6) நான் ஈஸாவைக்காண மஹா சிறந்தவன்
(தாபிவுல்பலா 13-ம் ப.)

(7) ஹஸ்ரத் ஈஸாவின் மாதா ஹஸ்ரத் மரியம் விவாகத்திற்குமுன் யூசுப் நஜ்ஜாருடன் கலந்துசவாடியிருந்ததில் கர்ப்பமாய்விட்டார். (கிஷ்திநூஹ் 16 அய்யாமுஸ்ஸுல்ஹ் 66ம் ப)

(8) ஹஸ்ரத் ஈஸா விபசாரப்புத்திரர், சாராயங் குடிப்பார் கெட்டஸ்திரீகளின் சாவகாசத்திலிருந்தார், அவரின் அற்புதங்களீனத்தும் ஏமாற்றமாயிருந்தன, அவர் பொய் சொல்லுகிறவராயிருந்தார், இன்னும் அவர் பொய்சொன்னார். (அஞ்சாமே ஆத்தம் அது 7 தாபிவுல்பலா கடைசிப் பக்கம் இன்னும் பல புஸ்தகங்களும்)

(9) ஈஸாவுடைய தாய் தகப்பன் வழியிலுள்ள முறையே மூன்று பாட்டிமார்களும் விபசாரிகளாக யிருந்தார்கள்,
(அஞ்சாமே ஆத்தம் அது 7ம் ப.)

(10) என்னை மறுத்தவர்கள் காபிர் அவர்களுக்குப் பின்னல் தொழக்கூடாது (ஹகீகத்துல்வஹீ 163 தஃப்பாமிகால் நியா அது 27)

(11) ஆண்டவன் எனக்கு ஹௌளதுல் கௌதரைக் கொடுத்திருக்கிறான் (அஞ்சாமே ஆத்தம் அது 58)

(12) நான் வஹியின்றி பேசமாட்டேன்.

(அர்பயீன் 3-ம் நிர். ப 44)

(13) ஆண்டவன் மிர்ஸாவைப் பார்த்து கூறுகிறான் உன்னைப்படைக்காவிட்டால் வானலோகத்தைப் படைக்கமாட்டேன்.

(ஹக்கீகத்துல்வஹீ 99)

(14) குர்ஆனில் சொல்லப்பட்ட அஹ்மத் நானே.

(இஸாலாமுதற் பதிப்பு 673-ம் ப.)

(15) நானூறு நபிமார்கள் ஒரு ராஜாவின் ஜெயத்தைப் பற்றி முன்னறிக்கை செய்தார்கள். அஃதெல்லாம் பொய்யாய் விட்டன, ஷைத்தானுடைய கனவாயிநந்ததினாலேயாம்.

(ஷஹாதத்துல் குர்ஆன் 45, 90, 91—ம் ப)

(16) எனக்கு ஒருவரையும் சமமாக்காதீர்கள்.

(குத்பா இல்ஹாமிய்யா 19-ம் ப)

(17) நான் முஸ்லிம்களுக்கு வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ்ஆகவும் இன்னும் ஹிந்துக்களுக்கு கிருஷ்ணனாகவுமிருக்கிறேன். (லெக்சர் லியால் கோட் 33-ம் ப)

(18) நான் நேர்வழிபெற்ற மஹ்தியாகவும் இன்னும் பல நபிமார்களிலிடச் சிறந்தவனாகவுமிருக்கிறேன்.

(மஹ்யாருல் அக்யார் 11-ம் ப)

(19) ஈஸாவின் அற்புதங்கள் மெஸ்மரிஸமாக இருந்தன அவனிடத்தில் ஏமாற்றத்தைத் தவிற வேறொன்றுமில்லை.

(அஞ்சாமே ஆத்தம் அது 7 முதல்)

(20) ஒருவருக்கும் கொடாத சிறப்பை ஆண்டவன் எனக்குக்கொடுத்திருக்கிறான். (குத்பா இல்ஹாமிய்யா 18 முதல்)

(21) குர்ஆன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று நான் குர்ஆனை வானத்திலிருந்து கொடுத்திருக்கிறேன்.

(இஸாலா 721-ம் ப)

(22) குர்ஆன்ஷரீபு அல்லாஹ்வுத்த ஆலாவின் வேதமாயும் எனது வாயிலிருந்து வந்த வார்த்தைகளுமாகயிருக்கின்றன. (ஹக்கீகத்துல் வஹீ 84-ம் ப)

(23) நான் மனமில் என்னை நிகூபமாக ஆண்டவனென்று கண்டேன். இன்னும் நான் அவனை என்று நிகூபமாய்க்கூறுகிறேன். அன்றியும் நான் வானத்தையும் பூமியையும் படைத்தேன். (ஆயினகமாலாத்தே இஸ்லாம் 564-ம் ப)

(24) ஆண்டவன் மிர்ஸாவைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஏ மிர்ஸா நீ என் குமாரனைப் போலிருக்கிறாய்.

(ஹக்கீகத்துல் வஹீ 86-ம் ப)

(25) நாம் அவைகளை (ஹதீஸ்களை) இறைவனிடமிருந்து எடுத்தோம் நீங்கள் பிசாசுகளிடமிருந்து நிவாயத்துச் செய்கிறீர்கள். (இஃஜாலே அஹ்மதி 57)

(26) நான் எப்போர்பட்ட மஹ்தியென்றால் ஹஸ்ரத் அபூபக்கர் தானென்ன; பலநபிமார்களைவிடச் சிறந்தவன். அபூஹுரைரு மந்த புத்தியுடையவர். இப்னுமஸ்ஊத் ஓர் சதாரண மனிதன். நான் இமாம் ஹுஸைனிடம் மகாசிறப்புப் பெற்றவன். (தாபிவுல்பலா 13 அஃஜாலே அஹ்மதி 52, 81 முதலிய பக்கம் இஸாலா 596-ம் பக்கம் அல்கௌலுல் ஸஹீஹ்)

இவைகளைப் படித்து முடிந்தவுடன் மேற்சொன்ன மிர்ஸா சாஹிபின் வசனங்கள் யாவற்றையும் இவ்விடம் மேஜையில் அடிக்கி வைத்திருக்கும் அவரின் புஸ்தகங்களால் ருஜுப் பிக்கத் தயாராயிருக்கிறேன் யென்றும் ஆகையால் மிர்ஸா சாஹிபும் அவரைத் தயர்ந்தவர்களும், தயர்ந்தவர்களைப் பின் பற்றியவர்களும் எம் தீனுல் இஸ்லாம் மார்க்கத்தைச் சேர்ந்தவர் களென கனவிலும் எண்ணக்கூடுமா வென்றும் கூறிவிட்டு இக் காதியானி மதஸ்தர்கள் பேரில் முஸ்லிம் உலகத்தின் பலகோணங்களினின்றும் உலமாக்களால் கொடுக்கப் பட்டிருக்கும் (பத்வா) வென்னும் மார்க்கத் தீர்ப்பை இந்த மஜ்லிஸில் வீற்றிருக்கும் பிரபல உலமாக்களாகிய உங்கள் முன்னிலையில் வைக்கப்பட்டால் அதை ஒப்புக்கொள்வீர்களா? இல்லையாவென வினவ சபையிலிருந்து ஒத்துக்கொள்வோமென்ற சப்தம் உண்டாக அப்படியானால் யெனக்கு பிரசேபிக்கும்படி கொடுக்கப் பட்ட 2-வது தீர்மானத்தை அஃதாவது

முஸ்லிம் உலகத்தில் முக்கியமாக இந்தியா, மிஸர், சென்கூன் முதலிய விடங்களின் பாரவான்களான உலமாக்களால்

காதியானி விஷயமாக கொடுக்கப்பட்டிருக்கும் பத்வாக்களை இலங்கையின் மேன்மையான உலமாக்களும் கல்விமான்களும் அடங்கிய இந்த மகாசபையும் அங்கீகாரம் செய்துகொண்டதென தீர்மானிக்கிறது.

யென்பதை நான் முழுமனதுடன் ஒப்புக்கொண்டதுபோல் நீங்களும் சரிகாணுவீர்களெனச்சொல்லிமுடித்தார்கள், உடனே ஜனுப் முஹம்மத் சுலைமான் ஆலிம் சாஹிப் அவர்கள் இதை ஆமோதித்துப் பேசுங்கால், ஹதீஸ், தலீல்களுடன் இம்மாதிரியான விஸ்வாசங்களுடையவர்கள் மூர்த்தத்தான கடுங்காபிர்களென உறைத்தார்கள். காதியானிகளுடையவும் மற்ற நெறிகேடர்களுடையவும் பிரசுரங்கள் முதலானதுகளை வாசிப்பதால் பல சந்தேகங்கள் உங்கள் மனதில் தோன்றுவதற்கு இடங்கொடுக்கும் யென உபமானங்களுடன் போதித்துவிட்டு நீங்கள் இனிமேல் காதியானி முதலிய நின்மார்க்க விரோதிகளின் புத்தகங்கள், பத்திரிகைகள், விளம்பரங்கள் முதலிய பிரசுரங்களை பார்க்கமாட்டோமென உறுதிகூறுவீர்களா? அப்படியானால் கையை உயர்த்துங்கள் யெனக்கேட்டதின்பேரில் யெல்லோரும் பார்க்கமாட்டோம் யென்கிற சப்தத்துடன் கைகளை உயர்த்தினர்கள். சந்தோஷத்துடன் இவர்களின் ஈமானின் உறுதிக்கு துவாச் செய்தவர்களாக இன்னும் இப்போர்பட்ட வழிகேடர்களுடன் யெவ்விதமாக விருக்கவேண்டுமென்றும் தெரிவித்து பொதுவாக நாம் முஸ்லிம் அல்லாதாருடன் யெவ்விதம் நடந்துகொள்கிறோமோ அவ்விதமே இம் மூர்த்தத்களுடனும் நம் எல்லா விஷயங்களிலும் நடந்துகொள்ள வேண்டுமென கடைசியாகக் கூறி இத்தத் தீர்மானமாகிய பத்வாக்கள் அடங்கியதைத்தான் ஆமோதிப்பதாகச் சொல்லி உட்கார்ந்தார்கள்.

ஜனுப் A. S. அப்துல்கப்பார் சாஹிப் அவர்கள் இத்தீர்மானத்தை ஆதரித்தவர்களாக மிர்ஸா குலாம் அஹ்மத்சாஹிபின் சரித்திரமும் காதியானிமதம் உண்டான விஷயமும் சுருக்கமாகச்சொல்லி காதியானியுடன் சாலன்ஜுக்கு தயாரென்றும் மேஜையிலிருந்த மிர்ஸா சாஹிபின் புஸ்தகங்களினின்றும் சில வசனங்களை சபையோருக்குப் படித்து மார்க்க பேதங்களை யெடுத்துக் காண்பித்தார்கள். இதில் வெகுநேரம் கழிந்ததால்

அக்கிராசனரின் குறிப்பின்பேரில் தனது பிரசங்கத்தை சுருக்கி இந்த தீர்மானத்திலடங்கிய பத்வாக்களின் கருத்து ஜனப் முஹம்மது சுலைமான் ஆலிம்சாஹிப் அவர்களின் உபந்நியாசச் சுருக்கந்தான் என்றுகூறி இந்த தீர்மானத்தைத் தானும் ஆகரிப்பதாகச்சொல்லி முடித்தார். தீர்மானம் சபைக்கு விடப்பட்டு எல்லோரும் ஆக்ஷேபனை ஒன்றுமில்லாமல் சரிகண்டதின் பேரில் நிறைவேறியது.

கம்பளீடவுண் பள்ளிகூடும் முஸ்லிம் சங்கத்து போஷகருமான மகாகனம் ஜனப் V.L முஹம்மத் தமீம் ஆலிம்சாஹிப் அவர்கள் மிக சுகவீனமாயிருந்தும் அவர்களுக்கு இச்சபையிலிருந்த வாஞ்சை அவர்களின் வருத்தத்தையும் கவனிக்காது 3 மணிவரையில் சபையிலிருக்கச் செய்ததுமன்றி அவர்களும் சபையோருக்கு ஓர் வார்த்தைசொல்ல நாடினதால் உத்திரவு கொடுக்கப்பட்டது. அவர்கள் மெல்ல மெல்ல மேடைமீது வந்து வெகு உற்சாகத்துடன் ஓர் தலீலேக்கொண்டும் ஹதீதைக்கொண்டும் இப்பேர்ப்பட்ட சபைகளின் வர்ணனையைப் பற்றிகூறி இச்சபையால் நிறைவேற்றப் பட்டிருக்கும் பத்வாவின் தீர்மானத்தை யேந்துகொண்டதற்கு இச்சபையின்கண் வீற்றிருக்கும் பாரவான்களாகிய உலமாக்கள் தங்கள் தங்கள் ஒப்பத்தை மேடி பத்வாவின்கீழ் வைத்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன் யென்றார்; இன்னும் முதல் தீர்மானத்தில் கண்டபடி இச்சபையை நிலைநாட்டுவதற்கான யேற்பாடுகள் இவ்விடமிருக்கும் யாவர்களும் ஒற்றுமையுமித்து இச்சமயமே செய்யும்படியாகவும் கேட்டுக் கொள்கிறேன் என்றார். இதை ஆமோதித்து கம்பளீடவுண் முஸ்லிம் சங்கத்தின் காரியதரிசி கூறியதாவது:- இச்சிறிய கம்பளீ யூரில் சிறுபான்மையோரான கம்பளிவாசி முஸ்லிம்களால் இவ்வளவு பூரிய சபையைக்கூட்டிச் செய்த முயற்சியைத் தவரவிடாது இவ்விலங்கை முஸ்லிம்கள் யாவர்களும் முதல் தீர்மானத்திற்கேற்ப இச்சபையை சாஸ்வதமாயிருக்கச்செய்வதற்கு பக்கபலமாக விருக்கவேண்டு மென்றும், இது உலமாக்களாலேயே நடத்தப்பட வேண்டுமென்றும் இச்சபையின் நோக்கமும் முக்கியமாய்ப் பிரசாரமும் மத்ரஸாக்கள் கலாசாலைகள் யேற்படுத்துதலுமாக விருக்கவேண்டுமென்றும் இல்லாமற்போகுமானல் மார்க்கப்புரட்சிகளும் வழிகேடுகளும் இப்

போது ஆரம்பித்திருப்பதைவிட இன்னும் ஜாஸ்தியாக ஆகிவிடு மென்றும் சொல்லி இதை ஆதரிக்கவேண்டுமென்றார்; இதற்கு கனம் முஹம்மத்தியால் அவர்கள் 5-உலமாக்களைக்கொண்ட ஓர் கமிட்டி தற்சமயம் ஏற்படுத்தி அவர்களுக்குள் ஓர் அக்கிரா சனரை நியமித்துக்கொண்டு இன்னும் மேற்கொண்டு தேவைப் படும் உலமாக்களையும் தெரிந்தெடுத்துக்கொள்ளவும் இச் சபை யின் நோக்கங்கள் நிறைவேற்றுவதற்கான காரியங்களை செய்து கொள்ளவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்துவிடவேண்டி யதுதான் யென்றார். மேடையிலிருந்த உலமாக்களும் மற்றவர் களும் சரிகண்டதின்பேரில் ஜனப் முஹம்மத்சுலைமான் ஆலிம் சாஹிப் 1. ஜனப் முஹம்மத்தாஹீம் ஆலிம் சாஹிப் 2. ஜனப் மௌல்வி ஹனீப்சாஹிப் நத்வி 3. ஜனப் முஹம்மத்அலி ஆலிம் சாஹிப் 4. ஜனப் அப்துல்ஹமீத் ஆலிம் சாஹிப் 5. இந்த ஐவர்களையும் காரியதரிசி ஜனப் யூசுப்ஷரீப் சாஹிப் அவர்கள் பொறுக்கியெடுத்து இவர்கள் ஐவரும் ஓர் கமிட்டியாக இருந்து மேல்நடவடிக்கைகள் நடத்திக்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள்.

கம்பளை முஸ்லிம் சங்கத்தாரின் கணக்குப் பரிசோதகர் கனம் M. L. H. ஹபீப்லெப்பை M. J. B.

அவர்கள் வரிசைக்கிரமமாய் சபையோருக்கும், சபையை நடத்தியவர்களுக்கும் வெகுதூரத்திலிருந்து வந்திருந்த உல மாக்கள் கனதனவான்களுக்கும் வந்தனோபசார வார்த்தைகளை பொழிந்தார்கள். கனம் முஹம்மத்தியால் அவர்கள் பதிலாக இந்த உபசாரவார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்வதாயிருந்தால் நீங்கள் எடுத்திருக்கும் முயற்சியை தாழவிடாமல் இச்சபையை முன்னுக்குக்கொண்டுவர வேண்டுமென்றார். பிறகு ஜனப் S. M. M. ஷேக் அப்துல்காதிர் காதிரியுல்லத்தீன் அவர்களால் துவா ஓதப்பட்டு சபை சலவாத்தின் முழக்கத்துடன் முடி வடைந்து கலைந்தது. உலமாக்களிடம் கையொப்பங்களும் வாங் கப்பட்டன.

குறிப்பு:– காதியானிமதஸ்தர்களைப்பற்றி உலமாக்கள் செய்த தீர்ப்பின் சாரம்.

இஸ்லாமானவர்கள் காதியானிமதத்தில் சேர்ந்துவிட்டால்

(நவூதுபில்லாஹ்) உடனே இஸ்லாத்தைவிட்டும் நீங்கிவிடுகிறார் கள். இஸ்லாம் மார்க்கசம்பந்தமான எந்த நடவடிக்கையும் அவர்களோடு வைக்கலாகாது. அவர்களுக்கு சலாம் சொல்லு வதும், அவர்களால் அறுக்கப்பட்டதைப் புசிப்பதும், அவர் களின் பிரேதங்களைதொழவைப்பதும், கபனிடுவதும், கபுரஸ்தா னம்களிலடக்குவதும், பள்ளியில் வரவிடுவதும் கூடாது. காதி யானிமதத்தில் சேர்ந்தவுடன் விவாகசம்பந்தம் முறிந்துவிடும். தலாக்குத்தேவையில்லை. காதியானி விஸ்வாசங்களும் அவர் களைப்பற்றிய உலமாக்கள் தீர்ப்பும் தெரிந்தபின்னர் அவர்களை காபிசொல்லுதில் சந்தேகித்தவனும் காபிரே. முஸ்லிம்கள் இவர் களிடத்தில் மத சம்பந்தமாக கலந்துகொள்ளாமல் மிக ஜாக் கிறதையாக யிருக்கவேண்டும். மேற்கூறப்பட்ட இவ் விஷயங் களை கவர்மெண்டுக்குத் தெரியப்படுத்தி இஸ்லாத்தின் பாத்தி யதைகளை பேணிக்கொள்ளவேண்டுமென்பதே.

எம். எஸ். என். உமர்பாகூா,
பொக்கிஷதார், டவுண் முஸ்லிம்சங்கம் கம்பளை.

மேற்கண்ட பத்வாவை ஆதரித்த ஆலிம்களின் நாமதேயங் கள் பின்வருமாறு:—

1. S. N. M. ஷைக் அப்துல்காதிர் காதிரிய்யி லித்தீக்கிய்யி கோட்டாரி.
2. K. V. C. S. லைய்யத்ஹாதி காதிரிய்யி லித்தீக்கிய்யி, கோட்டாரி.
3. முஹம்மதுசுலைமான் ஆலிம் சாஹிப், உக்குவளை.
4. உ. முஹம்மதுஅலி ஆலிம் சாஹிப், கண்டி.
5. முஹம்மதுஅப்துல்காதிர் ஆலிம் சாஹிப் கண்டி.
6. நாகூர்முஹம்மது ஆலிம் சாஹிப், குருகொட கண்டி.
7. முஹம்மது இபுராஹீம் பின் முஹம்மது இஸ்மாயில் ஆலிம் சாஹிப், காயல்பட்டணம்.
8. முஹம்மது ஷம்சுத்தின் லெப்பை ஆலிம் சாஹிப், மடவெளை, வத்தகாமம்.
9. லெப்பைக்கனி ஆலிம் சாஹிப், அப்கந்தொறை தெல்தெனி.

10. செய்குல்இஸ்லாம் ஸையது அப்துர்ரஹ்மான் ஆலிம் சாஹிப், மாதகாவெளி நுவரிலய்யா போஸ்டு.
11. ஆ. உ. அப்துல்ஹமீது ஆலிம் சாஹிப், அங்கும்புற, மாத்தளை.
12. மீ. இ. ஸையது முஹம்மது ஆலிம் சாஹிப், அங்கும் புற, மாத்தளை.
13. கதீப் அ. உதுமான் லெப்பை ஆலிம் சாஹிப், ஹபுகஸ் தலாவ, நாவலப்பிடிய.
14. உ. அஹம்மது லெப்பை ஆலிம் சாஹிப், களுகெதறை.
15. அஸைனுல் ஆபிதீன் ஆலிம் சாஹிப், அக்குருணை, அளவத்துகுடை.
16. M. அப்துல்மஜீது ஆலிம் சாஹிப், அளவத்கொடை.
17. அ. அசன்லெப்பை ஆலிம் சாஹிப் களுகாமம் கெளி யோயா.
18. மு க. மு. கௌதுபாவா ஆலிம் சாஹிப், திருக்கொணை மலை வீதி, கண்டி.
19. வை. அ. அசன் லெப்பை ஆலிம் சாஹிப், அல்பிட்டி, கம்பளை.
20. செ. ஸையது அஹ்மது ஜலாலுத்தீன் ஆலிம் சாஹிப், ஹட்டன்.
21. காலி ஸையது ஹஸனுத்தீன் சாஹிப், கண்டியூர், தஞ்சாவூர்.
22. ஆ. அ. ஹபீபு முஹம்மது ஆலிம் சாஹிப் ஹாஜி, களுகாமம், கெளி யோயா.
23. கதீப் ஆ. சுலைமான் ஆலிம் சாஹிப், மெ
24. M. S. முஹம்மது ஹனிபா ஆலிம் சாஹிப், அறநாயக்க
25. மீ. அ. ஆ. அப்துல்ஹமீது ஆலிம் சாஹிப், மஹ்யாவ தக்யா, கண்டி.
26. ப. மு அப்துல்காதிர் ஹாஜி அக்குறணை, அம்பத்தன்ன
27. அ. மு. யி. மஹ்மூது ஆலிம் சாஹிப், மேலப்பாளையம்.
28. காஜா A. R. பின் ஷெய்கு ஹாஜி ஜெலவ்ஹர் ஷாஹ், கொளும்பு.

29. நூ. கு. முஹம்மதுஉமற் ஆலிம்சாஹிப் காயல்பட்டணம்

30. செ. ம. ஆ. மகுதூம் ஆலிம் சாஹிப், வாடியத்தன்னை, அறநாயக்கா.

31. செ. அ. அப்துல்வஹ்ஹாபு ஆலிம் சாஹிப், கோவங்கல்ல.

32. கதீப் அ. அப்துல்ஹமீது ஆலிம் சாஹிப், இல்லவத்துரை கம்பளை.

33. காதியானிகளைப்பற்றி கூறப்பட்டிருப்பது அடங்கலும் அதன் விடையும் சரியாகயிருக்கின்றது.
Y. M. ஹனிபா ஆலிம் சாஹிப், முதர்ரிஸ் அரபி ஸாஹிரா காலேஜ், மருதானை கொளும்பு.

34. கதீப் யூ. லெ. மு. முஹம்மது தமீம் ஆலிம் சாஹிப், டவுண் பள்ளி கம்பளை.

35. காதியானிகளைப் பற்றி பாரவான்களான உலமாக்களினின்றும் வெளிவந்த மார்க்கத்தீர்ப்பு அடங்கலும் யாதும் சந்தேகமின்றி சரியானது.
கதீப் கா. அப்துல்பரீது ஆலிம் சாஹிப், டவுண் பள்ளி, கம்பளை.

36. ஐ. எல். எஸ். ஆலிம் சாஹிப். இல்லவத்துரை. கம்பளை.

37. மூசா ஹாஜி ஆலிம் சாஹிப், இல்லவத்துரை, கம்பளை.

38. ஜமாலுத்தீன் ஆலிம் சாஹிப், மர்தானைப்பள்ளி பேஷ் இமாம், கொளும்பு.

39. மிர்ஸாகுலாம் அஹ்மது காதியானி என்பவரின் மீது ரத்தாக வரையப்பட்ட மார்க்கத் தீர்ப்பில் சிலவற்றை நோட்டமிட்டேன். அது முற்றிலும் சரியானதாக இருக்கிறது. மேற் கூறப்பட்டவரின் இழிவான சொல்லின் மீது எவனுவது பின்பற்றுவானுயின் இஸ்லாமிய மார்க்கத்தைவிட்டும் உறுதியாக நீங்கிவிடுவான்.
அஹ்மதுலெப்பை ஆலிம் சாஹிப், கலீபத்துஷ்ஷாஹிலிய்யா முதர்ரிஸ் ஸாஹிரா காலேஜ், மர்தானை கொளும்பு

40. அப்துல்ஜப்பாரிபுனுசுல்தான் மரைக்காயர், மர்ஹூம் நாலுகோரளை.

குறிப்பு:— நம் கதாநாயகரான மிர்ஸாகுலாம் அஹ்மத் என்

பவரின் பொய், ஏமாற்று, கபடம் முதலிய வஞ்சகச்சூழ்ச்சிகளை முதன்முதல் ஆராய்ச்சியிடவேண்டுமென்று கண்டிப்பாய்க்கூறக் காரணம் யாதென ஒரு சிலர் வியுறலாம். அதைநிவர்த்திக்க கீழ் கண்ட விஷயத்தை நன்மனதுடன் சிறிது ஊன்றிக்கவனிக்கும் படி வேண்டுகிறேன்.

நம் நபிகுலகம் அவர்கள் காலம்முதல் காளிதுவரை நபி, மஸீஹ்; மஹ்தி வழக்கப்படியெனப் பலர்தோன்றி தத்தமக் குறிய கல்வித்திறமையினல் குர்ஆன் ஹதீதுகளின் பொருட்களை தம் தாவாக்களுக்கு அநுகூலமாகத் திருப்பி நன்றாய் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில் கூட வெகுசீக்கிரத்தில் தீயவழியில் திருப்பிவிட்டார்களென்பதை காதியானிவகுப்பாரும் ஏற்றுக் கொள்கின்றனர். இவ்வழிகெட்ட தலைவர்களிடம் தாங்கள் நபி, மஸீஹ், என்பதற்கு குர்ஆன் ஹதீதில் ஆதாரம் உண்டோவென கேட்கின், உடனே குர்ஆன் ஆயத்துகளையும் ஹதீதுகளையும் எடுத்துரைத்து இதுவே நமக்காதாரமாகும் எனக் கூறிவிடுகின்றனர். அதைமறுத்து நாம் இது குர்ஆன் ஹதீதுக்கும் ஸஹாபாக்கள், இமாம்களின் கருத்துக்கும் இசையவில்லையே, மாறுபாடாகத் தெரியவருகிறதே யெனக் கூறும்பக்ஷம் அதன் கருத்து அவர்களுக்கெல்லாம் விளங்கவில்லை; யான் இல்ஹாம் மூலமாக இறைவனிடமிருந்து அதன் உண்மை நுட்பங்களை அறிந்துகொண்டேன். ஆதலின் யான் கூறிவதே நியாயமான அர்த்தமாகும் என விளம்பிவிடுகின்றனர். இவ்வாறு அநேக பொய்யர் விளம்பியிருக்கின்றார்கள். உதாரணமாக (1) முஸைலமா. (2) அஸ்வது இன்ஸீ. (3) இப்னுஸையாது. (4) தலீஹா இபுனு குவைலிது. (5) சஜாஹ். (ஸ்திரீ) * (6) முக்தார். (7) அஹ்மது முதபன்னு ஷாஹிர். (8) பஹ்பூத். (9) எஹ்யா. (10) சுலைமான் கம்தி. (11) அபூஜஹ்பர். (12) ஈசபுனு மஹ்ரவியா (13) உஸ்தாதுஸீஸ். (14) அதா. (15) உதுமானிபுனுஹமீக், (16) வாமியா (ஸ்திரீ) (17) லா. (18) போஷிபா. (19) மிஸ்டர் வார்டு. (20) பஹிஸ்கு. (21) இபுறஹீம் பஸ்லா. (22) ஷைக் முஹம்மது குராஸானி. (23) முஹம்மது தோமரத். (காதி

* இவர்களிற் சிலர் பிற்காலத்தில் தங்கள் கொள்கைகளை விட்டுத் தௌபாச்செய்துவிட்டனர்.

யானியால் எழுதப்பட்ட அலுலும் முலப்பா, என்னும் நூலின் 554, 561-முதலிய பக்கங்களில் பார்க்குக.) (24) லைய்பத் முஹம்மத் ஜோன்பூரீ. (25) முஹம்மது அப்துல்லா. (26) முஹம்மது அஹ்மது சூடானி. (27) லைக்லுலாலி. (28) முஹம்மதிபுனு முஹம்மத், (29) முஹம்மதுல் அமீன். (30) முஹம்மது பாஸ்இலாக்கா. (31) மிர்லாகுலாம் அஹ்மது காதியானி பஞ்சாபி. (மதாஹிப இஸ்லாம் 784, 804-வரை)

மேற்கூறியவர்களுக்குப்பின் மிர்லாயி வகுப்பாரிலும் இதர வகுப்பாரிலும் பலர் நபியென்றும், மஹ்தீ வழிகாட்டியென்றும் வெளிவந்து செய்துவரும் குளப்பங்களே காதியானிமத ஆராய்ச்சி, முஸல்மான் சஞ்சிகைகளில் கண்ணுறலாம். *

எனவே ஆதாரத்தை மட்டும் கவனிக்கிறதாயின் வாய் வன்மை படைத்த இன்னவர்களேயெல்லாம் அவர்களின் தாவா வின்படி நபி, மஹ்தீ என்று ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவே நேரிடும், இவ்வாருயின் பொய்பர், வீரர், இன்னுரெனப் பகுத்தறியும் திறமையிழந்து மார்க்கம் தலைகீழாய்விடுமென்பது மிகையாகா. ஆதலின் முதலாவதாக அவனது யோக்கியதை களே நன்காராய்ந்து அப்பால் ஆதாரத்தை நோட்டமிடவேண் டும். இதுவே நியாயமான முறையாகும்.

நம் முன்னோர்களாகிய இமாம்களும் இவ்வாறே நிர்மானித் திருக்கிறார்கள். ஒருவன் நாயகமவர்களின் ஹதீதை ரிவாயத் துச் செய்தால் அதை எழுதிக்கொண்டு இவன்யார்? ஊரென்ன? இவனது தந்தையின் நாமம் யாது? இவனது குரு யார்? எங்கு கல்விபயின்றான்? இவனது கொள்கை யாது? சுன்னத்து ஜமா அத்தா அல்லவா? நன்னடக்கையுள்ளவனு? பொய் எப்போதா வது கூறியிருக்கிறானு? ஞாபக மறதி உண்டா வென்ற இது முதலான விஷயங்களே வெகு பிரையாசையுடன் ஆராய்ச்சியிடு வார்கள் இவற்றில் ஒன்றிலேனும் சிறிது விதண்டியாசம் அல்லது சந்தேகம் தோன்றப்படின் அவனுல் சொல்லப்பட்ட ஹதீது களே நம்பிக்கை இழந்தது என எழுதிவிடுவார்கள். இவ்வித உரைகல்லில்க்கொண்டே நாளிதுவரை பொய்க்கட்டான ஹதீது

* இஃது தென்காசி முஸல்மான் ஆபீஸில் கிடைக்கும், விலை கூ 1.

களை விட்டும் பேணிக் காக்கப்பட்டு வருகிறதென்பதை இஸ்லாமிய உலகம் நன்கறியும். இவ்வித உஷாகல் அந்நிய மதஸ்தரிடம் இல்லாததால் பல தவறுகள் உண்டாயிருக்கின்றன.

அன்றியும் பொய் இன்னது மெய் இன்னது கபடம், சூழ்ச்சி இன்னது என்பதைப் பகுத்துணரத்திறமை யற்றவர்களிடம் மத சம்பந்தமான தர்க்கமிடச்செல்வது வீணே நேரத்தைக் கழிப்பதாகும். மதசம்பந்தமான ஆதாரங்களை நோட்டமிட்டறிவதற்கு வெகு திறமைவேண்டும், பொய் மெய்யை உணரத் திறமையற்றவர்களிடம் ஆதாரங்களைக்குறித்து வாதாடுவதால் பயனேற்படுவது அசாத்தியமாதலின், முதன் முதல் இவ் விஷயங்களைத் தீர்த்துக்கொண்டு அப்பால் ஆதாரங்களில் தலையிடுவதுதான் சிறந்தமுறையாகும்.

எனவே தலீல்களை ஆராய்ச்சியிடுமுன் மிர்ஸாகுலாம் அஹ்மத் உடைய சன்மார்க்கத்தன்மையை ஆராய்ச்சிசெய்துவிட்டு அப்பால் அவரின் ஆதாரங்களை நோட்டமிடுவது விஷயமறிந்த உண்மைவிஸ்வாசிகளின் முதற் கடமையாகும். இவ்வுரைகல் காதியானிக்கூட்டத்தாருக்கு நஞ்சாகத் தோன்றுவதால் வேறு தந்திரங்களால் ஏமாற்ற ஆரம்பிப்பார்கள், முஸல்மான்கள் அதனால் ஏமாந்துவிடலாகாது, உண்மையை உணர்வதற்காகவே நாம் இவ்வுரைகளை ஏற்படுத்தியிருக்கிறோமே யன்றி வேறல்ல வென்பது யாவரும் அறியக் கடக்கின்றது.

மிர்ஸா ஸாஹிபின் பொய்க்கூற்று.

உலகில் பகுத்தறிவுடையோரெனச் சிறந்து விளங்கும் மானிடவர்க்கத்தாரனைவரும் பொய் கூறுவதை மிக அருவருப்பாக நினைக்கின்றார்களென்பது மறுக்கமுடியா உண்மையே. எச்சரதியினராயினும் ஒரு விஷயத்தம் பொய் கூறினவனை மறுவிஷயத்தம்சோதனைபுரிந்து திருப்தி ஏற்படாதவரைநம்பமாட்டார்களென்பது நிண்ணம். ஒரு சாதாரண கனிதனின் கதி இவ்வாறு ளல் நான் வழிகாட்டி, எனக்கு இறைவன் புறமிருந்து ஞானம் உதயமாகிறது, என்னை எல்லோரும் ஏகமனதாய் அங்கீகரித்துப் பின்பற்றவேண்டும்; எனதுபதவி வலிமார்கள், நபிமார்களைவிட உயர்ந்தது. என்னைவிஸ்வாசித்தலைக்கு கட்டுப்படாதவர்களாக்

கேலிக்குட்படுவர் எனது பகைவர்களிடம் நான் ஜெயம்பெறுவேன் எனதுவிரோதிகள் சிறுமைப்படுவர்;எனக்கு இறைவன் உதவிக்கு மேல் உதவிபுரிகிறான்; விண்ணுலகப்பட்டாளங்களெல்லாம் என்னோடிருக்கின்றன;நானே காலத்தின்மஸீஹாகவும்,நானே இறைவனுடன் வசனித்த மூஸாவாகவும், நானே முஹம்மது அஹ்மது முஸ்தபாவாகவு மிருக்கிறேன் என்றும், பலவிதமாகப் பகரும் ஒரு மனிதனை நாஞவித்தத்திலும் சோதனைபுரியாமல் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுகிறவனை பகுத்தறிவுள்ள மனிதவர்க்கத்தைச் சார்ந்தவனென எவரே பகரத்துணிவர்? காதியானி நண்பர்களும் இதைப்பொருந்துவார்களென்றே நம்புகின்றோம். அங்ஙனமாயின் இத்தகைய அகங்கார வார்த்தைகளால் பறையடித்துவரும் மிர்ஸா ஸாஹிபைப் பற்றி யாம் வினவும் வினாக்களுக்கு உலகத்திலுள்ள சர்வ காதியானிநண்பர்களும் ஆதாரங்காட்டி பதிலளித்து உண்மையான மனிதனென்று எண்பிக்கட்டும். இன்றேல் லஃனத்துப்பெற்ற தஜ்ஜாலென்று தீர்மானித்துத் தள்ளட்டும்.

காதியானிகளின் குருவும் நபியுமாகிய மிர்ஸா ஸாஹிப் கூறுகிறார்:- பொய்கூறுவதும், மனிதனின் மலத்தைப் புசிப்பதும் சமமே. (ஹக்கீகத்துல்வஹீ 206-ப.)

எவன் பொய் கூறுவானோ அவன் லஃனத்துப் (சாபம்) பெற்றவன். மெய்யை மறைக்கிற அற்பன் பிணமாயிருக்கிறான் இப்படிப்பட்ட (பொய்யன்) நாவிஞல் ஆண்டவன் உண்டுமென மொழிந்தாலும், உண்மையில் அவன் ஆண்டவனை மறுத்த நாஸ்திகனே. (காதியான்கே ஆரிய அவுர்ஹம் 19-ப.)

சகோதரர்களே! இதில் காதியானி மதஸ்தரின் நபி, பொய் கூறுபவனை நபீஸைப் புசித்தவனென்றும், லஃனத்துப்பெற்ற பிணமென்றும், கடவுளை விஸ்வாசிக்காத நாஸ்திகனென்றும் தீர்மானிப்பதை சிந்தையிலிருத்திக்கொண்டு கீழ் காட்டப்படும் பொய்வாக்கியங்களை ஆராய்ந்துபொய்கூறும் இப்மிர்ஸா எப்படிப்பட்டவரென்று நிதானியுங்கள்.

(1) குரூரிமௌல்வி குலாம்தஸ்தகீர் தமது நூலிலும் அஹ்கர்

மௌல்வி இஸ்மாயில் என்பவரும் எனதை பற்றிக் கண்டிப்பான

தீர்ப்புச்செய்திருக்கிற தென்னவெனில், அவர் (மிர்ஸா) பொய்யராயிருந்தால் எங்களுக்கு முந்தி மரணித்து விடுவார். இன்னும் கட்டாயம் எங்களுக்கு முந்தி மரணித்துவிடுவார். ஏனெனில் அவர் பொய்யராயிருக்கிறார். ஆயினும் அவர்களின் நூற்கள் உலகத்தில் பிரசித்தமாய் விட்டபொழுது பின்னர் அதிவிசை வாகத் தாங்களே மரணித்துவிட்டார்கள். இவ்விதமான அவர் களின் மரணமாகிறது எவன் பொய்யனுயிருந்தானென்பதை ருஜுப்படுத்திவிட்டது. (அர்பயீன் நிர். 3 ப 11)

இதில் எந்த வரியில் நாம் வரி இழுத்திருக்கிறோமோ அப் படியே மிர்ஸா ஸாஹிபும் வரிஇழுத்திருக்கிறார் இதன் கருத் தென்னவெனின் கோடு போட்டிருக்கிற அதேவரியை மேடிரு மெளல்விகளுக்கும் தங்கள் நூற்களில் வரைந்திருக்கிறார்கள் என்பதாம்.

மேற்கூறியவற்றில் இரண்டு மெளல்விகளின் நூற்களில் வருகிறதென்று கூறினபடியால் இரண்டு பொய்யாய்விட்டன.

ஏ! காதியானி நேயர்களே! உங்களது நபியின் சொற்படி கர்ட்டுவிர்களா? அன்றேல் லஹ்னத்துப் பெற்ற தஜ்ஜாலென்று கூறுவிர்களா?

(2) குர் ஆன்ஷரீபிலும் தௌறாத்தின் சில பாகங்களிலும் வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹின் காலத்தில் பிளேக் உண்டா குமென்ற விஷயம் உண்டாயிருக்கிறது ஞாபகமிருக்கவேண்டும். தவிரவும் ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமும் இஞ்சீலில்தெரிவித் திருக்கிறார்கள். ஆனதுபற்றி நபிமார்களின் முன்னறிக்கைகள் தவறிவிடுகிறது கூடாத காரியம் (கிஷ்தி நூஹ் ப. 5)

வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹின் காலத்தில் பிளேக் தோன்றுகிற விஷயம் பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது. (சக ரிய்யா அ. 14 வ. 12) (மத்தேயு அ. 24 வ. 8) (யோவான் அ. 22. வ. 8) (கிஷ்தி நூஹ் 5-வது பக்கம் நோட்)

இவ்விரு வசனத்திலுமுள்ள மிர்ஸா ஸாஹிபின் வாக்கியங் களைச் சுருக்கித் தருகிறேன்.

(1) குர்ஆன்ஷரீபில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத் தில் பிளேக் உண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (2)

சகரிய்யா அ. 14 வ. 12லும் (3) மத்தேயு அ. 24 வ. 8லும் (4) யோவான் அ. 22 வ. 8லும் மேற்கூறிய விஷயம் எழுதப் பட்டிருக்கிறதென்பதே மிர்ஸா ஸாஹிபின் வாதம்.

காதியானி எ. பி. மௌல்வி சாஹிபே! இக்கம்பனியில் ஜனப் முஸல்மான். ஆசிரியரின் முன் வெளியானுல் இவ்விதக் கேள்விகளால் கடாவி காதியானி மதத்தின் உயிர் ஸம்பை அறுத்துவிடுவாரென்றுதான் போல்தான்கான் வீட்டிலிருந்து வெளிக் கிளம்பாமல் பதுங்கிக் கொண்டிருந்தீரோ? வெட்கம்! வெட்கம்!! இந்த இரண்டாவது வாக்கியத்தில் நான்கு பொய்கள் சேர்ந்திருக்கின்றன. முந்தினதில் இரண்டு ஆக ஆறுபொய் யென்பது நேயர்களின் ஞாபகத்திலிருக்கட்டும்.

(7) ஸஹீஹ் புகாரியின் ஹதீதுகளில் கடைசிகாலத்தின் கலீபாக்களில் சிலரைக்குறித்துச் சொல்லப் பட்டிருக்கிறதில் விசேஷமாக புகாரியில் அந்த கலீபாவைப் பற்றி எழுதப்பட்டி ருக்கிறதாவது:- வானத்திலிருந்து அவருக்காக சப்தமுண்டா கும். அதாவது இவர் அல்லாவின் கலீபாவாகிய மஹ்தீயாயிருக் கும் என்பதே. (ஷஹாதத்துல் குர்ஆன் 41 ப.)

(8) தப்ஸீர் ஸனயியைப் பாருங்கள் அதில் மிக மூப்மூர மாக நமது இந்த விளக்கத்தின் உண்மை உண்டாயிருக்கிறது; அன்றியும் அதில் அபூஹுறைறுறலியல்லாஹு அன்ஹு இட த்தில் இதே அர்த்தமென்றும் எழுதப்பட்டிருக்கிறது, ஆயினும் அபூஹுறைறு குர்ஆனின் விளக்கத்தில் (அறிவு) குறைந்தவ ரென்றும் அவரின் புத்திசாலித்தனத்தில் முஹத்தீஸீன் [ஹதீ தையுடைய இமாம்கள்] களுக்கு ஆக்ஷேபமிருக்கிற தென்றும் அபூஹுறைறுவிடத்தில் [பார்த்த ஒரு விஷயத்தை] நகல் செய் கிற சக்தியிருந்ததென்றும், அறிவிலும் விளக்கத்திலும் மிகவும் குறைவான பாகமே வைத்துக் கொண்டிருந்தா ரென்றும் தப் ஸீரை உடையவர் எழுதுகிறார். [மாஹீன அஹ்மதிய்யா வா 5 ப. 234]

கொழும்பு தூதன் ஆசிரியரே! இந்த எமலோகப் புழுக ரைத்தான இன்னும் நபியென்று ருஜுப்பிக்க அறிவாளர் முன் குதித்துப் பாய்கிறீர்? ஐயோ வெட்கம்!

(9) முஜத்திதுசாஹிப் சர்ஹிந்தி தமது மக்தூபாத் (அவரது நூலின் பெயர்) இதில் எழுதியிருக்கிறார். இந்த உம்மத்தில் உள்ள சில நபர்களுக்கு அல்லாஹ்த்தஆலாவுடனே வார்த்தை பேசுகிறதைக் கொண்டும் சந்திக்கிறதைக் கொண்டும் சங்கை யசய்யப்பட்டாலும், இன்னும் மறைவான விஷயங்களில் பெரும் பாலனவற்றை அவன்மீது வெளியாக்கப்பட்டாலும் சரி, அவன் நபியென்று சொல்லப்படுகிறான். (ஹக்கீக்கத்துல்வஹீ 390 ப.)[1]

(10) ஹஸ்ரத் மஸீஹ்க்கு சிலுவையுடைய (சிலுவையிலறையப்பட்ட) விஷயம் 33-ம் வயதில் நிகழ்ந்தது. (ரூஹானிக்கத் 3 ப.)

இந்த விஷயத்திற்கு (சிலுவையிலறையப்பட்டதற்கு)ப்பின் ஈஸாவுடைய மரியம் 120 வயதைப் பெற்றார். பின்னர் மரணமாகி தனது இறைவனிடம் போய் அமர்ந்தார் என்று ஹதீதுகளால் வந்திருக்கிறது. (தத்கிரத்துஷ் ஷஹாதத்தைன் 27)

மிர்ஸா சாஹிபினுடைய இவ்விரு நிதாபுகளின் வாக்கியங்களை சேர்த்துப் பார்த்தால் ஹஸ்ரத் ஈஸா (அலை) சிலுவையில் அறையப்படும்போது 33 வயதென்றும் அப்பால் 120 வருடம் ஜீவித்திருந்தார்களென்றும் ஆக 153 வருடம் இம்மண்ணுலகில் உயிருடன் வாழ்ந்திருந்தார்களென்றும் தெரியவருகிறது. ஆதலின் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு 153 வயதென்று ஹதீதில் எங்கே வருகிறது?

ஏ! காதியானி பார்டிகளே! மிர்ஸா மஹ்மூது சாஹிபே! மலையாளம் சிலோனில் வசிக்கும் நேசர்களே! ஏ! லாகூர்பார்டிகளில் தலைவரான மௌல்வி முஹம்மதலி சாஹிபே இஸ்லாம் மார்க்கப் பிரசாரம் புரிகிறேனெனக்கூறி காதியானி மதப்பிரசாரம் புரியும் காஜா கமலுதீன் சாஹிபே! அவரைச் சார்ந்தோர்களே! நீங்கள் ஆண்மக்களாயிருந்தால் மிர்ஸா ஸாஹிபின் இவ்வாக்கியங்களை மெய்ப்பித்துக் காட்டுங்கள்? இன்றேல் ஆண்தன்மையற்ற பேடிகளென அங்கீகரியுங்கள். இந்த அபாண்டபுழுகைத்தானா ஐரோப்பாவெல்லாம் தூக்கிக் காட்டுகிறீர்கள். பி. ஏ ; எம். ஏ. வாசித்தோர்களே! பொய் மெய்யை அறியும் உங்களது பகுத்தறிவை எங்கே?

குர் ஆன்ஷரீபு ஹதீதுகளுடைய அம்மூன்னறிக்கைகள் பூர்த்தியடைய வேண்டியது நிகூபமாயிருந்தன. அவற்றில் எழுதியிருந்த தென்னவெனின் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ் தோன்றும்போது இஸ்லாமிய உலமாக்களின் கையால் துக்கிப் பார், அவர்கள் அவரை (மிர்ஸாவை) காபிரெனத் தீர்மானிப்பார் கள். அன்றி அவரை (மஸீஹை)க்கொல்லவும் பத்வாக் கொடுக் கப்படும். மேலும் அவரை கடினமான நிந்தனை செய்யப்படுவது மன்றி அவரை இஸ்லாத்தின் சுற்றெல்லையை விட்டுப்புறம்பான வரென்றும் மார்க்கத்தை அழிக்கக்கூடியவரென்றும் கருதப் படும் (அர்பயீன் நிர். 3. ப. 20)

இவ்வாக்கியத்தில் குர்ஆன் ஹதீதுஷரீபுகளில் இவ்வசனம் வருகிறதாகக் கூறுகிறார். ஏ! காதியானி மதஸ்தர்களே! குர்ஆன் ஹதீதில் எங்கேவருகிறது காட்டுவீர்களா? நேயர்களே! இந்தப் புழுகர்தானே உங்களது நபி? இவர்தானே கலீபா? இவர்தானே மஸீஹ்? இவரை அங்கீகரியார்தான் நரகவாசியோ தூப். இந்த இரண்டு பொய்யையும் சேர்த்து மொத்தம் 12 பொய்யாய்விட் டனை.

மிர்ஸா ஸாஹிபு "காதியான்கே ஆரியா அவர்ஹம்" என்ற ஓர்நிறய நூலியற்றிக்கொண்டுவரும்போது அதன் 7ம் பக்கத்து நோட்டில் குறிப்பிடுகிறார்

(13) இந்நூலை எழுதும் சமயம் மிஸர்தேசம் அதாவது இஸ்கந்தரியாவிலிருந்து நேற்று 23 ஜன்வரி 1907ல் ஒரு கடிதம் போஸ்டுமூலம் எனக்கு கிட்டியது. (அக்கடிதத்தை)எழுதினவர் அப்பட்டணத்தில் ஓர் விசேஷ கீர்த்திவாய்ந்தவர். அதாவது இஸ்கந்தரியாவாசி. அவ்மது ஸபீரிபதுருத்தீன் என்பது அவ ரது நாமம். கடிதம் பந்தோபஸ்தாக இச்சமயம் என் கைவசமி ருக்கிறது. (அதில்) அவர் எழுதுகிறார்.

நான் தங்களுக்கு கூறும் சுபசெய்தி என்னவெனின் இத் தேயத்தில் தங்களுக்கு கீழ்படிந்தோரும் இன்னும் தங்களைப் பின்பற்றினோரும் வஞ்சகத்தின் மணல் இன்னும் கற்களைப் போன்று (எண்ணத்தொலையாவண்ணம்) பெருகியிருக்கின்றார் கள். பின்னும் எழுதுகிறார் தங்களைப் பின்பற்றுகவன் எவனு மின்றென்பது எனதபிப்பிராயம். (ஹகிகதபு 7 ப.)

இதில் எண்ணத் தொலையாத, ஏட்டிலடங்காத என்னும் பழமொழிக் கேற்ப பொய்கள் சேர்ந்திருக்கின்றன. எனினும் தற்போது இதை ஒருபொய்யாக வைத்துக்கொள்கிறேன். மிஸ்ர் தேசத்திலிருந் தெழுதப்பட்ட ஒருவரின் கடிதத்தை வைத்துக் கொண்டு மிர்ஸா ஸாஹிபைப் பொய்யனெக்கூற காரணம்யா தென ஒரு சமயம் வினவலாம். மிர்ஸா ஸாஹிபோ மறைவான விஷயங்களே ஏராளமாயறிந்தவர். ஜனங்களின் தக்தீரைக்கூட தமது கரத்தினுல் வரைந்தவர் இப்பேர்ப்பட்டவர் இது உண் மையென நம்பாவிட்டால் இதை எழுதமாட்டார். ஒரு சமயம் எழுதினுலும் தமது தத்துவத்தினுல் இது பொய்யெனக் கூறி யிருப்பார், அங்ஙனமின்மையால் இதையும் இவர்மீதே சுமத்தப் பட்டிருக்கிறது. ஆகலின் 1907–23 ஜனவரிவரை இல்கந்தரியா நகரில் இத்தனை காதியானிகளைக் காட்டட்டும்? காதியானிகளே! மிஸர், இல்கந்தரியா நிலைமைகளே ஆராய்ந்துகூறுங்கள்.

(14) மௌல்வி ஸனாவுல்லா இரண்டணுக்களுக்காக வாசல் கள் தோறும் கெட்டலைந்து திரிகிறார். அன்றியும் இறைவனின் கோபம் இறங்குகிறது. மையித்துகளின் கபன் அல்லது வஹஸ் (மார்க்கோபதேசம்) செய்வதினுல் கிடைக்கும் பொருளால் காலத்தைக் கடத்துகிறார். (அஹ்ஜாஸ் அஹ்மதீ 23 ப.)

ஏ! காதியானி நண்பர்களே! நீங்கள் மல்லுனுடைய சிஷ் யர்களின்றேல் இதை மெய்ப்பியுங்கள். மௌல்வி ஸாஹிபு எப் படி காலக்ஷேபஞ் செய்கிறார்?

மிர்ஸா கூறுகிறார் (1) சூர் ஆனுகிறது என்னைக்குறித்து சாட்சி கொடுத்திருக்கிறது. (2) ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என்னைப்பற்றி சாக்ஷிபகர்ந்திருக்கி றார்கள். (3) மூன்ன நபிமார்கள் நான் (மிர்ஸா) தோன்றும் கா லத்தைக் குறிப்பிட்டு விட்டார்கள் (4) அது இதே காலமாகும். (5) சூர் ஆனும் நான்வரும் காலத்தை குறிப்பிடுகிறது. (6) அது இதே காலம். (7) எனக்காக வானமும் சாட்சிகொடுத்துவிட்டது (8) இன்னும் பூமியும் (சாட்சிநீர்த்துவிட்டது) (9) அன்றியும் என்னைப் பற்றி சாட்சி பகராத ஒரு நபியுமில்லை. (துஹ்பத்துந் நதுவர் ப. 4) இதில் 9-வது விஷயத்தை மட்டும் கவனிப்போ மாயின் முஸ்லிம்களின் விசுவாசப்படி (ஒருசொற்படி) ஒரு

59370

லக்ஷத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள்வரை உண்டு. இந்த கணக்கின்படி பார்த்தால் இந்த ஒன்றில் மட்டும் ஒரு லக்ஷத்து இருபத்து நான்காயிரம் பொய்கள் குவிந்துகிடக்கின்றன, ஆயினும், தற்சமயம் இதை ஒரு பொய்யாகத் தீர்மானித்து மேற் கூறிய மற்ற விஷயங்களையும் சேர்த்து ஒன்பது பொய்யாகத் தீர்மானிக்கிறோம். முந்தின 14 உடன் இந்த 9-ம் சேர்ந்தால் 23 பொய்யாகிறது. ஏ! காதியானிகளே! இதை ருஜூப்பீர்களா? மனிதத் தன்மையை யிழந்து ஏன் மதவெறி பிடித்தலைக் கிறீர்கள்.

(24) இது உலகெல்லாம் அறிந்த சட்டமும் முஸ்லிம்கள் கலாநூக்கள் இன்னும் யூதர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஸ்வாசமாகவுமிருக்கிறது. என்னவெனின், வஹீத், அதாவது வேதனையைப்பற்றிய முன்னறிக்கையாகிறது தௌபாவும் பாவ மன்னிக்கத் தேடுதலும் பயத்துடைய நிபந்தனையும் அன்றியே நீங்கக்கூடியதாயிருக்கிறது. (துஹ்பா கஸ்னவிய்யா ப. 5)

இதன் கருத்தாவது ஆண்டவன் தனது விரோதிகளுக்கு அதாபை இறக்குவேனென்று வாக்குறுதி கூறிவிட்டு அடிமைகள் தௌபாச்செய்து பயப்படாவிட்டாலும் அந்த தனது வாக்குறுதியை மாற்றிவிடுவானும். முஸ்லிம், கிறிஸ்தவர், யூதர் ஈறாக எல்லோரும் இம் மஸ்அலாவை ஏகோபித்து அங்கீகரித்திருக்கிறார்களாம். சுபஹானல்லாஹ்! ஆச்சரியப்!! ஆச்சரியப்!!! இந்த ஒன்றில் மட்டும் கோடிக்கணக்கான புழுகுகள் ஏற்படுகின்றன என்றாலும் ஒரு பொய்யாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

(25) ஒரு ராஜாவின் காலத்தில் அவனின் ஜெயத்தைப்பற்றி நானூறு நபிமார்கள் முன்னறிக்கை செய்திருந்தும் அஃதெல்லாம் பொய்யாய் அவன் சிறுபைப்பட்டவனாகக் கொல்லப்பட்டான் என்று பைபிளில் எழுதப்பட்டிருக்கிறது. (ஸறாறத்துல் இமாம் சுருக்கம் 17 ப.)

மிர்ஸா ஸாஹிபின் பொய்களைப் பற்றிய ஆராய்ச்சி.

(1) பொய் கூறினவன்பது இறைவனின் லஃனத்து(முனிவு) உண்டாகுகவென்று குர்ஆன் ஷரீபிலும்; பொய்யாகிறது நரகத்திற் சேர்த்து விடுமென்று ஹதீது ஷரீபிலும்; பொய்மொழி

கூறுகிறவன் மனிதர்களின் மலத்தைப் புசிக்கத் தருந்தவன் என்றும் நாஸ்திகனென்றும்; மிர்ஸா ஸாஹிபின் வாக்கியங்களி லும் கூறப்படுவதால் ஜனப் மிர்ஸா ஸாஹிப் லஃனத்துப்பெற்ற மல்லுனென்றும் நாகவாதி என்றும் மலத்தைப் புசிப்பவனென் றும் தெற்றெனத்தெரிகிறது.

(2) அல்லாவின்மீது கட்டுரை செய்கிறவனைப்போல் அநியா யக்காரன் எவனென்று குர்ஆன் ஷரீபிலும், என்மீது இல்லா ததைச் சுமத்துகிறவன் அக்கினிக்குழியில் வீழ்வானென்று ஹதீது ஷரீபிலும்; கூறப்படுவதால் ஜனப் மிர்ஸா ஸாஹிப் நியா யமற்ற நாகவாதி என்பது ஸ்பஷ்டமாய் தெரிந்துவிட்டது.

(3) உலக வர்த்தமானங்களில் ஒரு சிறியபலனைக் கருதி ஒருவன் ஒரு விடுத்தம் பொய்பகர்ந்தால் மற்ற எந்தக் காரியத் திலும் நனகு சோதனை புரியாமல் நம்பலாகாதென்பது வெளிப் படை. அதிலும் மதவிஷயத்தில் அல்லாவின்மீதும் நபிமார்க ளின்மீதும் மற்றும் மனிதர்கள் மீதும் பொய்மொழி பகர்ந்தால் அவன் தஜ்ஜாலென்பதில் யாதும் தடையுண்டோ? அன்றியும் ஒரு விஷயத்தில் பொய்மொழி கூறினவன் மறு விஷயத்தில் பொய்மொழி கூறுனென்பதற்கு ஆதாரமென்ன?

ஆகவே, ஒரு விடுத்தம் பொய்கூறினவன் கதி இவ்வாறுயின் வயிறு வீங்கப் புழுகும் ஜனப் மிர்ஸா ஸாஹிபை எக்காரியத்தி லேனும் அணுத்துணையும் நம்பலாகாதென்பதற்கு இதுவே போதிய சான்றாகும்.

(4) மனிதர்களால் பார்க்கக்கூடிய பஹிரங்கமான விஷயங் களில் இத்தனை அபாண்டப் பொய்களைப் பிதற்றும் ஜனப் மிர்ஸா ஸாஹிப் தமது வஹீ, கனவு, கஷ்பு, இல்ஹாம், முன்னறிக்கை இன்னும் குர்ஆன் ஹதீதுகளுக்குப் பொருளமைத்தல், முதலிய இவற்றில் எத்தனை பொய்களையும், புரட்டுகளையும் சேர்த்திருப் பாரென்பதை பாமரர் முதல் அறிந்துகொள்வது கஷ்டமாகாது.

ஆகவே மேற்கூறப்பட்ட 25 அம்ஸங்களால் ஜனப் மிர்ஸா ஸாஹிப் லஃனத்துப்பெற்ற நாகவாதியென்றும், பொய்யனென்றும் நம்பத்தகாதவனென்றும் நிர்மானிக்கப்பட்டுவிட்டபொழுது அவர்

நபியுமல்ல, ரசூலுமல்ல, மஸீஹுமல்ல, மஹ்தியுமல்ல, இமாமுமல்ல, வழிகாட்டியுமல்ல. மேலும் எந்த விஷயத்திலாவது நம் பத்தருந்த உண்மையுடையவருமல்ல வென்பது தானாகவே ருஜுவாகிவிட்டது.

ஜனப் மிர்ஸா ஸாஹிப் மஹ்தியுமல்ல, மஸீஹுமல்ல, நம் பத்தருந்த உண்மையுடையவருமல்ல வென்பது அங்கிகாரமாகி விட்டபொழுது குர் ஆன் ஷரீபிலும், ஹதீது ஷரீபிலும், முன்னறிக்கையாய்க் கூறப்பட்டுள்ள ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஹஸ்ரத் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் இதுவரை வரவில்லை யென்றும் இனிமேல் குறிப்பிட்ட காலத்தில் வருவார்கள். அக்காலத்தில் தஜ்ஜால், யாஜூஜ், மாஜூஜ் முதலிய பல அடையாளங்கள் வெளிவருமென்பதும் காதலா கமலம் போல் தெரிந்து கொண்டோம். அல்ஹம்துலில்லாஹ் உண்மை வெளியாகிவிட்டது காதியானி நேயர்களே! இந்த மல்ஹீனத்தானை தூக்கிச் சுமக்கிறீர்கள்?

இதை வாசிக்கும் அன்பர்களே! இம் மிர்ஸா ஸாஹிபின் உயர்ந்த மகாமின் மகத்துவத்திலும் சிறியதோர் பாகத்தை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டாமா? கேளுங்கள்.

அல்லாஹுத்த ஆலா மிகத்தெளிவாக அவருடன் வார்த்தையாடுகிறான். இன்னும் ஒரே நேரத்தில் கேள்விக்குப்பின் ஜவாபும், அப்பால் கேள்விக்குப்பின் ஜவாபும் தொடர்ச்சாகக் கொடுத்து வருவதைப் பார்த்தால் ஆண்டவனைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் தோற்றுகிறது. சவாரிக்காரன் சாட்டையினுல் குதிரையை தனது அதிகாரத்தில் வைத்திருக்கிறது போல் மறைவின் ஒவ்வொரு விஷயங்களையும் தன் கைவசப் படுத்திக்கொள்கிறான்; சென்றுபோன இன்னும்வருங்காலத்தின் விஷயங்களையறிந்து கொள்கிறான் இதேவிழிப்பில் நம் பெருமானவர்களைத் தெரிசிக்கிறார். சென்றுபோன பெரியோர்கள் இன்னும் அமரர்களால் உண்மையான விஷயங்களைத் தெரிந்துகொள்கிறார். (ஸறாறத்தில் இமாம் 13 ஆயினு கமாலாத் 386, 128, 183, 231 ஜங்குமுகத்தஸ் 129 முதலிய பக்கங்களில் பார்க்க)

அறிஞர்களே! இத்தனை மகத்துவமாம்! இத்தனை பொய்யாம்! நகைப்பை அடக்கிக்கொள்ளுங்கள், கந்தப்புராணம் இதற்கு நாசித்தூளாகுமா?

மிர்ஸா ஸாஹிபின் மரண வாக்கியங்கள்.

ஒரு மனிதன் தான் மனிதர்களுக்கெல்லாம் வழிகாட்டியென்றும் நபியென்றும், இன்னும் பலவிதமாகவும் ஆர்ப்பரித்து ஜனங்கள் முன்தோன்றி வாதம் செய்கிறான்; அப்பால் மறுமுறையில் மேற்கூறியவற்றை யெல்லாம் மறுத்து வேறுவிதமாகத் தாவாச்செய்கிறான். இங்ஙனம் தனது ஒவ்வொரு பலத்த தாவாக்களையும் ரத்துசெய்து மாற்றி மாற்றிக்கூறி வருவதாயிருந்தால் இவன் பொய்யனென்பதற்கு இம்மரண வாக்கியங்களைவிட வேறு ஆதாரம் தேவைபடாதென்பது அறிஞர் அறிந்த உண்மையன்றோ? நிகழ்காலம் உலகில் வெறும் பறைசாற்றிவரும் என்னருமை காதியானி மதஸ்தரும் இதனை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்வார்களென்பதே எமது துணிபு

"ஹாஷியா சத்பச்சன்" (ப. 29) என்னும் கிரந்தத்தில் மிர்ஸா ஸாஹிபு "எவன் தனது வியாக்கியானத்தில் முன்னுக்குப்பின் முரணை விஷயங்களைச் சேகரிக்கிறதுமன்றி, அதை அறியாதவனுகவு மிருக்கிறானே அவனே மகா கடைகெட்ட ஜாஹிலாக யிருக்கிறான்" என்றும், (ப. 31) "ஒரு இருதயத்திலிருந்து முன்னுக்குப்பின் முரணை இரண்டு வாக்கியங்கள் வெளியாகமுடியாது. எனெனில், இப்பேர்ப்பட்ட வாக்கியத்தால் மானிடன் உன்மத்தங்கொண்டவ னென்றும் அன்றேல் முனபிக்கென்றும் சொல்லப்படுவான்" என்றும் வரைந்திருக்கிறார்.

காதியானி நண்பர்களே! முன்னுக்குப்பின் முரணை வார்த்தைகளை வெளிப்படுத்தினவன் பித்தம்பிடித்தவன் அல்லது முனபிக்கென்று கூப்பிடப்படுவான் என்று தங்களின் நபியும், ரசூலும், மஹ்தியும், மஸீஹ்-மான மிர்ஸா ஸாஹிபு அறுதியிட்டுக்கூறியிருக்கிறதைத் தங்களது மனதில் நன்றாய்ப் பதியவைத்து அப்பால் அதையே ஓர் உறைகல்லாக்கிக் கொண்டு சீழ்க்கண்ட விஷயங்களைப் பரீக்ஷித்துத் தீர்ப்பளியுங்கள்.

மிர்ஸா ஸாஹிபு எழுதுகிறார்.

1. "உவமையாக்கப்பட்ட இருவஸ்துக்களில் முழுப்பூரண மான ஒற்றுமை வேண்டிய அவசியமில்லை" (இஸாலா முதல் பாகம் 30 ப.)

மூரண்:- "உவமையாக்கப்பட்ட இரண்டு வஸ்துக்களில் பூரணமான ஒற்றுமை அவசியமாகிறது." (சத்பச்சன் ப. 164)

2. "ஈஸாவுக்கு ஓளவு பொய்சொல்லுகிற வழக்கமிருந் தது." (அஞ்சாமே ஆத்தம் அநுபந்தம் ப 5)

மூரண்:- "எந்த மஸீஹ் நபியாயிருந்தாரோ அவருடைய வார்த்தை பொய்யாகமாட்டாதென்பது வெளிப்படை" (அல்ப றிய்யா ப. 6)

3. (நம் நபிபெருமான் அவர்கள்) "சந்திரனை இரண்டு துண்டாக்கி விட்டார்கள்" (சர்மயசஷம் ஆரியா ப. 48, 49)

மூரண்:- "மதிபிழந்தது ஒருவித சந்திரக் கிரகணமாய் இருந் தது." (நூருல் மஸீஹ் ப. 128)

4. "மஸீஹ் தமது தேசமாகிய கலீலிற் சென்று மரண மாகிவிட்டாரென்பது உண்மை." (இஸாலா ப. 197)

மூரண்:- "எந்த மனிதன் கஷ்மீர் ஸ்ரீநகர் கானியார் என்ற தெருவில் அடங்கப்பட்டிருக்கிறாரோ....." (தாபிஹ்-ல்பலா ப. 197) (ஈசா நபியவர்கள் இங்கேயே அடங்கியிருக்கிறார்களென் பது கருத்து)

மூரண்:- ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமுடைய கபுர் பலதா-குதுஸில் இருக்கிறது. மேலும் இதுவரை உண்டு. அதன்மீது ஓர் கோவில் கட்டப்பட்டு அதனுள் ஹஸ்ரத் ஈஸாவின் கபுரும், ஹஸரத் மரியம்லித்நிக்காவின் கபுரும் இருக்கின்றன. பனீஇஸ் ராயில்களின் காலத்தில் இந்த பலதாகுதுஸின் நாமம் எருசலேம் ஆகஇருந்தது. (1311-ம்வரு அச்சிட்ட இத்திமாமுல் ஹ-ஜ்ஜத் 19—20—21 ப. நோட்) (அஹ்லஸுன்னத் வல்ஜமா அத்து 11 ஜமாதில் அவ்வல் 1339)

மூரண்:- ஹஸ்ரத் மஸீஹ் இரண்டாம் விடுத்தம் உலகத்திற்கு வரும்போழ்து அவர்களின் கையால் எப்பாகங்களிலும் இஸ்லாம் மார்க்கம் நிலவிவிடும். இதில் ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்

மரணமடையவில்லை யென்று தீர்மானித்திருக்கிறார். (பராஹீன், 458, 459, 465 ப.)

5. "யான் ரூம்சுல்தானை இமாமென அங்கீகரிக்கமாட்டேன். ஏனெனில், ஹதீதுஷரீபின் பிரகாரம் இமாம் குறைஷிகளினின்று மிருக்கவேண்டியது அவசியம்." (கஷ்புல்கத்தா பக்கம் 34)

மூரண்:- (மிர்ஸா சாஹிபு தாமே இமாமென்று வாதாடிய பொழுது ஜனங்கள் அவரை நோக்கிநீர் குறைஷியல்லவேஎன்று வினவ, அவர் சொல்கிறார்) "இதெல்லாம் எனது வேலையல்ல; ஆண்டவனிடம் கேட்டுக்கொள்ளுங்கள்" (துர்ரதமீன் ப. 107)

சகோதரர்களே! சற்று கவனியுங்கள் ரூம் சுல்தானவர்கள் குறைஷியல்லாததன்பொருட்டு அவரை ஒப்புக்கொள்ளாத இவர் தாம் இமாமென்று தாவாச் செய்கிறதற்குக் காணம் ஆண்டவனிடம் கேட்டுக்கொள்ள வேண்டுமாம்!

6. வாக்களிக்கப்பட்ட மஸீஹ்ற வெளிவந்த இத்தருணத்தில் இவ்வேழையைத் தவிர்த்து ஒருவனும் 'நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாயிருக்கிறேன் என்று வாதம்புரியவில்லை" (இஸாலா 2-ம் பாகம் 278 ப) "மேலும், இப்பதிமூன்றும் நூற்றாண்டு வரை எந்த முஸ்லிம் புறத்திலிருந்தும் நானே வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹான தாவாச் செய்யவுமில்லை." (ஷி ப 683)

மூரண்:- சொற்பகாலமாயிற்று: அமெரிக்காவில் ஒரு கிறிஸ்தவர் "தாமே மஸீஹிப்னுமரிய மென்று வாதாடியுள்ளார்" (இஸாலா 2-ம் பாகம் ப. 279) "இன்னும் இன்று 1904 ஆகஸ்டு 27 உ பைஸா என்னும் பத்திரிகையைப் படிக்குங்கால் ஹகீம் மிர்ஸா மஹ்மூது என்ற ஈரானி ஒருவர் லாகூரில் அமர்ந்திருக்கிறரென்றும், அவரும் ஓர் மஸீஹுடைய தாவாவைத் தாங்கி வாதம் புரிகிறரென்றும், இன்னும் என்னுடன் தர்க்கத்தை விரும்புகிறரென்றும் தெரியவந்தது" (ரிஸாலா லெக்சூர்லாகூர்) (அஹ்லஹதீஸ் மிர்ஸாயி நாவல்)

7. நபிமார்களின் முன்னறிக்கைகள் தவறிப்போகிறது கூடாத காரியம் (கிஷ்தி நூஹ் 5 ப.)

முரண்:– ஒரு ராஜாவின் காலத்தில் நானூறு நபிமார்கள் அவனின் ஜெயத்தைப்பற்றி முன்னறிக்கை செய்திருந்தும் அஃதெல்லாம் பொய்யாய்விட்டன. (ஸூறாத்துல் இமாம் 17 ப.)

8. ஆதலால் உவமையின் விதமாக இவன் (மிர்ஸா) தன் தையன்றிப் பிறந்த இப்னு மரியமாயிருக்கிறான். இவனுக்கு யாதொரு ஆத்மதந்தை உண்டென்று உங்களால் ஸ்தாபிக்க முடியுமா? (இஸாலா 2-ம் பாகம் 269 ப.) (1169 ப.)

இதில் ஹஸ்ரத் ஈஸா நபி அவர்கள் தந்தையின்றிப் பிறந்தார்களென்று ஒப்புக்கொள்கிறார். அதாவது எவ்விதமாக ஹஸ்ரத் ஈஸா நபிக்குத்தந்தையில்லையோ அதுபோல் எனக்கு ஆத்ம தந்தையில்லை யென்பது அவரின் கருத்து.

முரண்:- மஸீஹ் தமது தந்தை யூசுபுடன் 22 வருடமாகத் தச்சுவேலை செய்துகொண்டிருந்திருக்கிறார். (இஸாலா முதற் பாகம் 125 ப.) (1013)

9. ஆரியசமாஜிகள் தங்கள் வேதத்தைத் தவிர்த்து தௌராத்து, ஸபூர், இஞ்ஜீல், புர்கான், ஆகிய வேதங்களே கட்டுமை யென்றும் (அதை இரங்கப்பெற்ற) பரிசுத்த நீர்க்கத் தரிசிகளாகிய ஹஸ்ரத் மூஸா, ஈஸா, மஸீஹ், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா அலைஹி முஸ்ஸலாம் முதலான நபிமார்களே பொய்யர்களாக்கி அவர்களின்மீது இழிச்சொற்களே வழங்கி வருகிறார்கள். அதை நம்மால் கேட்கமுடியவில்லை. (பாஹீனுக்காக கொடுத்த நோட்டீஸ்)

முரண்:–மஸீஹ், பொய்யன், துர்செண்ணமுடையவன், சாராயம் குடிப்போன், யகூதியின் சிஷ்யன், ஷைத்தானுக்குப்பின் நடந்தவன், மூடப்புத்தியுடையோன், ஏமாற்றுக்காரன், இவரின் தாய் தந்தை வழிகளிலுள்ள மும்மூன்று பாட்டிகள் வேசைகளாக யிருந்தார்கள். அவ்வுதிரத்தில் நின்று இவன் ஜனித்தான். இன்னும் விபசாரியாயிருந்தான். (அஞ்சாம ஆதம் அது. 3, 4 முதல் 7 வரை) பத்ஹமஸீஹ் 19. 45.

10. மஸீஹ் அவர்களைச்சிலுவையில் அறையப்பட்ட நேரமாகிறது மூன்று மணிபாயிருந்தது (இஸாலா 49 ப.)

முரண்:- (சிலுவையில் அறையப்பட்டது நேரமாகிறது) சற்றே றக்குறைய இரண்டு மணி நேரத்தைவிடக் குறைவே. (இஸாலா 324 ப.)

இன்னும் எழுதுகிறார்:-

சிலதிமிஷங்களிலேயே மஸீஹை சிலுவையில்இருந்தும் இறக் கப்பட்டது. (இஸாலா381 ப.) (அல்மஸீஹ¤த் தஜ்ஜால் 19 ப.)

11. எனது தாவாவை மறுத்த எவனையும் யான் காபிரெ னக்கூறேன். (பைஸலா ஹ¤க்கும் சுருக்கம் 12)

முரண்:-என்னை விஸ்வாசியாதவன் காபிர்.(மிஷ்காத்பு 13 ப.)

12. (குர்ஆனில் கூறப்பட்ட) தாபத்துல் அர்லென்ற வார் த்தையின் அர்த்தம் வெளிரங்கமான உலமாக்களாகும். (இஸாலா 1104)

முரண்:- தாபத்துல் .அர்லு என்ற வார்த்தையின் அர்த்தம் பூமியிலிருந்து தோன்றும் புழுவாயிருக்கிறது. (லெக்ஷர் சியால் கோட் 49 ப.)

13. வெளிரங்கமான மகத்துவத்துடன் (மஸீஹ்) வருகி றதும் முதலாவது தமஷ்கில் இறங்குகிறதும் சம்பவிக்கக்கூடி யதே. (இஸாலா 1009)

முரண்:- வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே.(இஸாலா 909 ப)

14. மஸீஹ் இறங்குகிறது நமது ஈமானுடைய ஒரு உறுப் பும் அல்லது நமது மார்க்கத்தின் கடமைகளில் நின்றும் ஓர் கடமை யென்றும் சொல்லத்தக்க ஓர் விஸ்வாசமில்லையென்பதை முதலாவதாக உணரவேண்டும் (இஸாலா 60 ப.

முரண்:- ஆதலால் நீங்கள் எதுவரை ஈஸாவின் மௌத்தைப் பற்றி விஸ்வாசிக்கவில்லையோ அதுவரை அஹ்லஸ்ஸுன்னத்துவல்ல அஹ்ல குர்ஆனுமல்ல (கிஷ்திநூஹ் 16 ப.)

15. நேச்சரியர்களின் இருதயங்களில் அல்லாசூல் உடைய வார்த்தைகளைப் பற்றிய மதிப்பு இல்லை, ஆதலால் எந்த விஷயம் அவர்கள் புத்திக்கு எட்டாததாக இருக்குமோ அதை சம்பவிக்கத் தகாததும் நடக்காததுமான நிலைமையிற் சேர்த்து விடுகிறார்கள். இந்த இயற்கைச் சட்டமென்ற பல்ஸ்யாவைப்

பார்க்கினும் சற்று உயர்ந்த வேறொரு இயற்கைச் சட்டமுண்டு அது மிகத்தணக்கமாயும் இரகசியமானதாயு மிருக்கிறது. (இஸாலா 557 ப.)

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமை நெருப்பில் போட்ட போது ஆண்டவன் அவர்களுக்காக அந்நெருப்பை குளிர்ச்சியாக்கிவிட்டான். (ஹக்கீகத்துல் வஹீ 49 சுருக்கம்)

முரண்:- ஒரு மனிதன் இந்த மண்சரீரத்தோடு சீதகோளம் [குளிர்ந்த ஆகாயம் அல்லது வானம்] வரை சேர்ந்துவிடுகிறதை பழய புதிய பல்லபர ஒற்றுமையாக [இயற்கைச் சட்டம்] கூடாதென்று ஸ்தாபிக்கிறது. (இஸாலா 912 ப.)

எனவே, இவரின் முரண் வாக்கியங்கள் இன்னும் பலஉள. ஆகவே, மேற்கூறிய இவ்வாக்கியங்களே இம் மிர்ஸா ஸாஹிபின் வாக்கியத்தைக் கொண்டே சோதனைபுரிந்தால் இவர் மகா சடைகெட்ட ஜாஹிலென்றும் பித்தம் பிடித்தவன் அல்லது முனபிக்கென்றும் சொல்லவேண்டியதாக ஏற்படுகிறது.

இவரை முனபிக் என்பதை நிறுத்திக்கொண்டாலும் இவருக்கு ஏற்பட்ட நீரழிவு, தலைச்சுற்று, மூளைவாட்சி, போன்ற பலவியாதிகளில அடிக்கடி வருந்திக் கொண்டிருந்ததினல் பித்தம் பிடித்த பேயர் என்பது மகாநிச்சயமாய் ருஜுவாகிறது. இதற்கநுகூலமாக பாதிரி ஜே. டானியல் என்பவர் மிர்ஸா ஸாஹிபைப் பார்த்துவிட்டு மூளைகெட்டுப்போனதினல் இவர் பைத்தியங் கொண்டவராய்விட்டார் என்று முடிவு சுட்டினதாக மிர்ஸா ஸாஹிபின் சிஷ்யர் பேராப்பூர் ஸஆதத் அலிகான் அஹ்மதீகூறுகிறார். [அஹ்லஹதீஸ் 9 ஸபர் 1342]

ஆகவே, இவரின் தீர்ப்புப்படி முனபிக்காகவும் உன்மத்தங் கொண்டவனென்றும் ஏற்பட்டுவிட்டபொழுது இவரது தாவா அட்டங்களும் வெறும் பொய்யென்றும், இவர் மஹ்தியுமல்ல, நபியுமல்ல, மஸீஹுமல்ல வென்பதும் கதலா கமலம்போல தெரிந்துகொண்டோம்.

ஏ! காதியானிகளே! பைத்தியங்கொண்ட முனபிக்கை எதுவரை பின்பற்றிக்கொண்டு போவீர்கள் இதையறியத்தக்க

நேர்மைக்குடையவர் உங்களிலொருவரு மில்லையா? நீங்கள் தானே புத்திப்படியும், ஸயன்ஸ்ப்படியும், வேதப்படியும், மதப் பிரசாரம் புரிவோர்? நீங்கள்தானே ரசூல் நாயகம் உடைய ஸஹாபிகளுக்கு நிகராவீர், தூப்!

மிர்ஸா ஸாஹிபு ஹனபி மதுஹபே!

மிர்ஸா ஸாஹிபை அவரது உம்மத்துகள் கண்களை இறுகப் பொத்திக்கொண்டு நபியென்றும் ரசூலென்றும் மஹ்தீ, மஸீஹென்றும் இன்னும் பல உயர் நாமங்களால் உயர்த்தி, குரு பறக்கமாட்டார், சிஷ்கள் பறக்கவைப்பார்கள் என்னும் மூது மொழிக் கேற்ப தூக்கிச் சுமக்கிறார்கள். அவர் தாமே தம்மைப் பற்றி மல்வுன் என்று முடிவுகட்டியிருப்பது ஒருபுறமிருக்க, அவர் சுன்னத்து வல்ஜமாஅத்தைச் சேர்ந்த ஹனபி மதுஹபைத் துயர்ந்தவரென்றும் தெரியவருகிறது.

முதல் கலீபாவாகிய ஹக்கீம் நூறுத்தீன் சாஹிபு கூறுகிறார்.

ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப் அஹ்லஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தில் விசேஷமாக ஹனபி மதுஹபாயிருந்தார். உண்மையளவில் பஹிரங்கமான இதேகூட்டத்திலிருந்தார். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் (பதர் 14. நவம்பர் 1912) (அஹ்ல ஹதீஸ் 29. ரபியுல் ஆவ்வல் 1342.)

ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப் அஹ்லஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தில் விசேஷமாக ஹனபிமதுஹபா யிருந்தார். வெளிரங்கமான உண்மையுடைய இதேகூட்டத்திலிருந்தார். அல்ஹம்துலில்லாஹிரப்பில் ஆலமீன். (நூறுத்தீன் 29. ஆகஸ்டு 1912)(பைகாம ஸுல்ஹு 12 ரஜப் 1344.)

இன்னும் சிறப்புற்ற இமாமாகிய ஹஸ்ரத் அபூஹனீபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஹதீதுகள் கிடைக்கவில்லையென கைமுகல்லிதுகள் கூறுவது பிசகென மிர்ஸா ஸாஹிபு ஆட்சேபிப்பதிலிருந்து மேற்கூறிய விஷயம் உறுதியடைகிறது. [தாரீகமிர்ஸா 39 ப.]

ஆகவே, மிர்ஸா வென்பவர் ஹனபிமதுஹபைச் சார்ந்தவ ரேயன்றி வேறல்லவென்பது வெளிப்படை.

மிர்ஸா ஸாஹிப் பாரிஸ் வம்சமல்ல.

சூரத்து ஜும்ஆவில் வஆகரீன மின்ஹும் என்றுஓர் ஆயத் துவருகிறது. இதன் கருத்தாகிறது இன்னும் சந்திக்கவில்லையே அவர்களில் நின்றும் ஒருகூட்டம் வரும், என்ற இந்த ஆயத்தை நாயகமவர்கள் ஓதினபொழுது யாஹலாத் இதுவரை நம்முடன் சந்திக்காத அக்கூட்டம் யாரென்க நாயகமவர்கள் அதற்கு யாதும் பதில்கூறவில்லை, யான் மூன்று விடுத்தம் கேட்டேன், எங்களில் ஸல்மான் பார்ஸீ ரலியல்லாஹு அன்ஹு இருந்தார் கள். நாயகமவர்கள் தங்கள் திருக்கரத்தை ஹஸரத் ஸல்மான் [ரலி] அவர்கள் மீது வைத்துக்கூறினர்கள்.

ஈமான் தரியா [வானத்திலுள்ள நக்ஷத்திரப்] பின் சமீபத் தில் சென்றுவிட்டாலும் பாரில் வம்ஸத்தில் நின்றும் அநேகர் அல்லது ஒருவர் அதைப்பொருத்துக்கொள்வர். [ரூவி ஹஸரத் அபூஹுறைரு [ரலி] ஸஹீஹ் புகாரீ, வா. 2. 727 ப. தப்ஸீர் இபுனுஜரீர் வா. 28 ப. 58]

இதேவிதம் சிறிது விபரங்களுடன் ஸஹீஹ்முஸ்லிம், திரு மதீ, தப்ஸீர் துர்ரமன்தூர் முதலிய கிதாபுகளிலும் வருகின்றன.

இதைக்கவனித்த பொய்மஹ்திகளும் பொருளாசைபிடித்த போலி மஸீஹ்களும் இந்த ஆயத்தையும் ஹதீதையும் தம்மீது சேர்த்துக்கொள்ள அநேக சாமர்த்தியங்கள்செய்திருக்கின்றனர்.

மிர்ஸா ஹுஸைன் அலிபஹாயீ.

இவர் உண்மையான மஹ்தியாயிருப்பதால் இவ்வாயத்தும் அதையொட்டிவரும் ஹதீதுகளும் ஈரானில் தோன்றி வெளி வந்த இம்மஹ்தியையே குறிக்கும் என அநேக சாமர்த்தியத் தினல் பஹாயீ வகுப்பார்கள் ஸ்தாபிக்கிறார்கள். [அல்மஹியா ரூஸ் ஸஹீஹ் 137, 138 ப.]

மஹ்தவி சைய்யித முஹம்மது ஜோன்பூரீ என்பவர் இவ் வாயத்துகளைக் கொண்டு தமது கூட்டத்தை ருஜுப்பித்து தாம் மஹ்தியாக வாதிக்கிறார். [ஹதியா மஹ்தவிய்யா 112 ப.]

இவ்வாறு ஒவ்வொருவரும் இவ்வேத வாக்கியத்தை தம் பக்கமாகவே இழுத்துக்கொள்ளும்போது, நான் இறைவனிடம் நேர்முகமாய் வசனித்திருக்கிறேன். தக்தீரை என் கரத்தாலே

முகிலேன் எனக்கூறும் மிர்ஸா ஸாஹிபுக்கு இவ்வேத வசனங்களைச் சம்மந்தப்படுத்தாமல் விட்டுவிடமுடியுமா? மிர்ஸாயி மதஸ்தர்கள் இவ்வாயத்து ஹதீதையும் விட்டார்களில்லை.

எடிட்டர் அல்ஹக்கும், ஷெய்கு யஹ்கூபு அலி தூராப் எழுதுகிறார். இவ்வாயத்து ஹதீதுகளால்வசப்பட்ட வாக்களித்த மஸீஹ் பாரிஸ் வம்சமாயிருப்பர். ஹதீதுகளில் பாரிஸ் வம்சத்தினுள்ள ஓர் சீர்திருத்தகர் வெளியாவாரெனச் சொல்லப்பட்டிருக்கிறது. மிர்ஸா ஸாஹிப் [இதன்படி] பாரிஸ் வம்சமாயிருக்கிறார். இன்னும் இவர்கள் ஹலரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய வம்சத்தில் நின்றுமாயிருக்கிறார் என்பதே. [ஹயாத்துன்னபி முதல் பாகம் 5-7, 9 ப.]

இதைச் சிறிது நோட்டமிடுவோமாயின் எவ்வாறு ஒவ்வொரு பட்டங்களுமிவ்விடும் நீக்கப்பட்டுப் போகிறதோ அவ்வண்ணமே இதைவிட்டும் நீக்கிவிடப்படுகிறார். உண்மையில் இவர் ஹஸ்ரத் இப்ராஹீம் [அலை] அவர்களின் குடும்பஸ்தருமல்ல, பாரிஸ் வம்சமுமல்ல. மேலும், முகல் வம்சமென்பது தெற்றென விளங்காகிற்கின்றது. மிர்ஸாவினுடையவும் அவரது உம்மத்துகளுடையவும் கிதாபுகளிலிருந்தும் எம் தாவாவை ருஜூப்பிக்கிறோம்.

1. மிர்ஸா ஸாஹிபு முகல்களின், பர்லாஸ், என்ற கீர்த்தி பெற்ற வம்சத்தின் ஞாபகக்குறியாயிருக்கிறார். உதாரணமாக மிர்ஸா ஸாஹிபு தமது பற்பல கிரந்தங்களில் இதைப்பல விடுத்தம் விபரித்திருக்கிறார். மிர்ஸா ஸாஹிபுகூறுகிறார் நமது வம்சம் பர்லாஸ், ஆகயிருக்கிறது. [கிதாபு அல்பரிய்யா 134]

2. இன்னும் பர்லாஸ் மொகலாயர்களின் மதிப்புப்பெற்ற கீர்த்திவாய்ந்த கூட்டமாயிருக்கிறது இதில் தைமூரைப்போலுள்ள வீரவான்கள் சென்றிருக்கிறார்கள். இவ்வகுப்பாரில் உயர்ந்த வம்சத்தலைவர், கரச்சார் என்றநாமம் புனைந்தவரோ. [ஹயாத்துன்னபி வா. 1 ப. 18]

3. சர்லெப்பல் கிரீபன் தமது தாரீக ரஹ்ரா பஞ்சாப் என்னும் நூலில் எழுதுகிறார்.

பாபர் சக்கிரவர்த்தியின் ஆட்சிகால இறுதி 1530-ம் வருஷத்தில் ஹாதிபேக் என்ற ஓர் சமர்க்கந்துவாசி தமது தேசத்தைவிட்டு விட்டு பஞ்சாப் வந்தற்றார். [ஹயாத்துன்னபி வா. 1 ப. 17]

4. பர்லாஸ் என்பது முகலாயர்களில் கீர்த்திபெற்றதோர் கூட்டம், அதில் தைமூரைப்போலொற்ற ஜெயஷீர் சென்றிருக்கின்றனர் ஹிஜிரி 600-ம் நூற்றாண்டின் சமீபத்தில் கரூச்சார் என்ற நாமமுள்ள ஒருவர் அக்குடும்பத்தின் முதல் தலைவராயிருக்கிறார் [பசாஹீன அஹ்மதியா 1906-ம்வரு பதிப்பு லாகூர் 45 ப.]

மிர்ஸா ஸாஹிபு, மிர்ஸா ஹாதீபேக் என்னும் முகலாயரின் வம்சத்தில் நின்றுமுள்ளவர். இவர் ஹாஜி பர்லாஸ்உடைய குமாரர். ஹாஜி பர்லாஸ் உடைய பிதாவின்பெயர் பர்க்காலிபுஇ கரூச்சார் ஆகயிருந்தது.

இந் நான்கு ஆதாரங்களால் மிர்ஸா ஸாஹிபு முகல்வம்சத்திலுதித்தவரென்றுதெரிந்துகொண்டோம்.

5. ஹஸ்ரத் நாஹ் [அலை] அவர்களுக்கு ஸாம், ஹாம், யாபிது என்று மூன்று குமாரர்களுண்டு.

[1] ஸாமுடைய குடும்பம் அரபி, பாரிஸ், ரூமி ஆகியவர்கள்.

[2] ஹாமுடைய குடும்பம் பர்பரீ, கிபுதீ, சௌடானியர்கள்

[3] யாபிதுடைய குடும்பம் யாஜூஜ், மாஜூஜ், துர்க்கி, சக்காலியர்கள் [ரூவிஹலஸத் அபுஹபிறை கன்ஸூல் அம்மால் வா. 6 ப 129]

ஹஸ்ரத் இபுறஹீம் [அலை] அவர்களுக்கு இருகுமாரர்களுண்டு.

[1] ஹஸ்ரத் இஸ்மாயில் [அலை] [2] ஹஸ்ரத் இஸ்ஹாக் [அலை] ஹஸ்ரத் இஸ்மாயில் [அலை] அவர்களின் குடும்பத்திற்கு பனி இஸ்மாயில் என்றும், ஹஸ்ரத் இஸ்ஹாக் [அலை] அவர்களின் குடும்பத்திற்கு பனீ இஸ்ராயில் என்றும் கூறப்படுகிறது.

இவ்விரு வகுப்பாரின் மூலபிதா ஹஸ்ரத் இபுறஹீம் அலை ஹிஸ்ஸலாம் ஆகயிருக்கிறார்கள். ஹஸ்ரத் இபுறஹீம் அலை ஹி

ஸ்லாம் ஹஸரத் நாஹ் அலைஹிஸ்ஸலாம் உடைய சாம் என்ற குமாரரின் குடும்பத்தில் நின்றுமாயிருக்கிறார்கள். [தாரீக இஸ்லாம் பாபு 1, பஸ்ல் 2, பக்கம் 10]

6. அஹ்மதியா ஜன்திரீ [ஹிஜிரி 1339 பக்கம் 2] பராஹீன், அல்பரிய்யா, தாரீக பிரிஷ்தா, தாரீகஹிந்து முதலான கிரந்தங்களை ஆராட்டமிட்டபின், மிர்ஸா ஸாஹிபின் வம்ச வரலாறு எழுதியிருப்பதாவது,

மிர்ஸாகுலாம் அஹ்மது இவர் தந்தை மிர்ஸாகுலாம் மூர்த்தலா, இவர் தந்தை மிர்ஸா அகாமுஹம்மது, இவரது பிதா மிர்ஸா குலேமுஹம்மது அப்பால் மிர்ஸாஹாதீபேக் ஹாஜி பர்லாஸ் பர்க்கால், காரச்சார், போரஞ்சிர்கா ஆன் மன்கூ ஜோகியாபாதா, யலாதோஸ்கான், தைமூர்தாஷ், கியான், எல்கான், தங்கீஸ்கான், ஆகூஸ்கான், கருகான், முகல்கான், அல்புகாகான், கீவக்கான், மாலாப்பாதூலி, அல்புகாகான், துர்க்யாபிது, ஹஸ்ரத் நாஹ் அலைஹிஸ்ஸலாம் ஆகஇருக்கின்றது.

மிர்ஸா ஸாஹிபு பாரிஸ் வம்சமாயிருப்பாராஸ்ல் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஹஸ்ரத் இஸ்ஹாக் [அலை] இவர்களின் வழியாக ஹஸரத் இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாம் மூலம் இவரது பிதா வம்சத்தொடர். ஸாம் இபுனு ஹஸரத் நாஹ் அலைஹிஸ்ஸலாம் வரை சென்று முடிந்திருக்கவேண்டும். அங்குமின்றி இவரது பிதா வம்ச பரம்பரை கருச்சார் முகல்கான் வழியாக தர்க்கி இபுனுயாபிது இபுனுநாஹ் அலைஹிஸ்ஸலாம் வரை போய்ச்சேர்வதால் மிர்ஸா ஸாஹிபு பார்ஸிவம்சமுமல்ல. ஹஸரத்இபுறுஹீம் [அலை] அவர்களின் கோத்திரமுமல்ல வென்பது வெள்ளிடை மலைபோல் விளக்கிவிட்டது [8 ரமலான் 1343 அஸ்லஹ]

முஸ்லிம் சகோதரர்களே! இப்புத்தக ஆரம்பத்தி
முடிவரை நன்கு ஆராய்ந்து உண்மையை உண
ருந்படி வேண்டிக்கொள்கிறேன்.

M. S. N

59390
முற்றும்